விலை ரூபா 5.00 பக்கங்கள் பத்து **Registered as a News paper in Srilanka**

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம் நாவாந்துறைப் படிப்பகம்

# வலம்புரி
# VALAMPURI

மல்லிகா மிக்சர் மாளிகை
மல்லிகா
நறு நறு மொறு மொறு
காரமான சுவையுடன்
ரேஸ்ரி பொம்பே ரீப்பீஸ்
ரேஸ்ரி ரைறரானிக் காரவடை
ரேஸ்ரி மரவள்ளி பீஸ்
இல.149, மின்சார நிலைய வீதி
(பஸ் நிலையம் அருகே)
யாழ்ப்பாணம்

சங்கு03 வள்ளுவர் ஆண்டு 2033 தை 3 புதன்கிழமை (16.01.2002) தொலைபேசி 3378 ஒலி 27

### முடிவு எட்டப்படாத நிலையில்

# நோர்வேயின் சமாதானக் குழு பாலாவுடன் தொடர்ந்து பேச்சு!

## நிரந்தர யுத்தநிறுத்தத்திற்கு வாய்ப்பு ஏற்படலாம்?

(லண்டன்)

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக இலண்டனில் உள்ள தமிழீழவிடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துடன், நோர்வேயின் வெளிவிவகார பிரதி அமைச்சர் ஐவர்ஹெல்கீசன் தலைமையிலான சமாதான தூதுக்குழுவினர் நேற்று இரண்டாவது தடவையாக பேச்சுவார்த்தையை ஆரம்பித்துள்ளனர். சுமார் நான்கரை மணித்தியாலங்கள் நீடித்த இப்பேச்சுவார்தை இச்செய்தி எழுதும் வரை நடைபெற்றுக்கொண்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் ஐவர் ஹெல்கீசன் தலைமையிலான குழு பேச்சு வார்த்தையில் ஈடுபட்டுள்ளது. நோர்வேயின் சமாதான தூதுக் குழுவினர் நிரந்தர யுத்தநிறுத்தம் தொடர்பாக இலங்கை அரசின தும், ஜனாதிபதி சந்திரிகா குமார துங்கவினதும், இந்திய தூதுவரின தும் கருத்துக்களை அன்ரன்பால சிங்கத்துடன் விரிவாக எடுத்துக் கூறியுள்ளனர்.

இதேவேளை யுத்தநிறுத்தம் தொடர்பாக விடுதலைப்புலிகளின்

(10ம் பக்கம் பார்க்க)

## பத்திரிகையாளர்கள் வன்னி விஜயம்

(வவுனியா)

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான வன்னிக்கு சர்வதேச, உள்ளூர் பத்திரிகையாளர்கள் 12பேர் நேற்று விஜயம் செய்துள்ளனர்.

வன்னிக்குச் செல்லும் இப்பத்திரிகையாளர்கள்குழு அங்குள்ள மக்களின் வாழ்க்கைத்தரத்தை அறிவதுடன் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களையும் சந்திப்பர். இதே

(10ம் பக்கம் பாரக்க)

# விலையேற்றத்தை கண்டித்து 18ந் திகதி பூரண ஹர்த்தால்

## புளொட் அமைப்பு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் அத்தியாவசியப் பொருட்கள் பதுக்கிவைக்கப்படுவதையும் விலையேற்றத்தினையும் கண்டித்து நாளை மறுதினம் 18ம் திகதி வெள்ளிக்கிழமை குடாநாடு தழுவிய பூரண ஹர்த்தாலும், யாழ் செயலகம் முன்பாக சத்தியாக்கிரகப் போராட்டமும் நடத்துவதற்கு புளொட் அமைப்பு ஏற்பாடு செய்துள்ளது.

இது குறித்து அவ்வமைப்பு பத்திரிகைக் குறிப்பொன்றை அனுப்பி வைத்துள்ளது. அக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது தற்போது யாழ் குடாநாட்டில் திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் அத்தியாவசிய பொருட்களின் பதுக்கலுக்கும், விலையேற்றத்துக்கும் எதிராக வெகுஜனப்போராட்டத்தை எமது அமைப்பு முன்னெடுத்து செல்லவுள்ளது இதற்கு

(2ம் பக்கம் பார்க்க)

### உள்ளூராட்சித் தேர்தல்

# வேட்புமனுத் தாக்கல் திகதி மிக விரைவில் அறிவிக்கப்படும்

(கொழும்பு)

மார்ச் மாதத்தில் நடைபெற உத்தேசிக்கப்பட்டிருக்கும் உள்ளுராட்சி மன்றத்தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்வதற்கான திகதி இன்னும் இரண்டு தினங்களுக்குள் அறிவிக்கப்படவிருப்பதாக தேர்தல் திணைக்களம் நேற்றுத் தெரிவித்துள்ளது.

இதேவேளை உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டத்தின் பிரகாரம் ஏப்ரல் மாதம் 14ம் திகதிக்கு முன்னதாக 311உள்ளுராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்றும் தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது

# இராணுவத்தரப்பு ஊழல்களைக்களைய சந்திரிகாவின் அரசு தவறிவிட்டது!

## உண்மையை ஏற்றுக்கொள்கிறார் கதிர்காமர்

(கொழும்பு)

இலங்கை இராணுவம் மற்றும் படைத்தரப்பில் காணப்பட்ட ஊழல்கள், முறைகேடுகளைக் களைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா சர் லஷ்மன் கதிர்காமர் ஒப்புக் கொண்டுள்ளார் அண்மையில் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் மேற்கண்டவாறு

கடந்த காலத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு விட்ட தவறை ஐக்கிய தேசிய முன்னணி அரசும் செய்யாது. இராணுவம் மற்றும்

### மூன்று அமைச்சர்கள் முன்னிலையில் (வ)

# வன்னிக்கான பொருட்கள் 30 லொறியில் அனுப்பிவைப்பு

(வவுனியா)

பாதுகாப்பு அமைச்சினால் தடைசெய்யப்பட்ட பொருட்களை தவிர ஏனைய உணவுப்பொருட்களும், பெறுமதி வாய்ந்த பிறபொருட்களும் நேற்று 30லொறிகள் மூலம் வன்னிக்கு அனுப்பிவைப்பட்டது.

வைபவத்தில் புனர்வாழ்வு அமைச்சர் டாக்டர் ஜயலத், உள்த் துறை அமைச்சர்ஜோன்அமரதுங்க, வன்னி புனர்வாழ்வு அமைச்சர் நூர்டீன்மன்சூர் ஆகியோருடன் இராணுவ பொலீஸ் அரசஉயர் அதிகாரகளும் கண்காணிப்

(கொழும்பு)

இலங்கை இராணுவம் மற்றும் படைத்தரப்பில் காணப்பட்ட ஊழல்கள், முறைகேடுகளைக் களைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் அரசு தவறிவிட்டதை முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லஷ்மன் கதிர்காமர் ஒப்புக்கொண்டுள்ளார் அண்மையில் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

கடந்த காலத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு விட்ட தவறை ஐக்கிய தேசிய முன்னணி அரசும் செய்யாது. இராணுவம் மற்றும்

(2ம் பக்கம் பார்க்க)

ருட்களும் நேற்று 30லொறிகள் மூலம் வன்னிக்கு அனுப்பிவைப்பட்டது.

இப்பொருட்கள் அனுப்பிவைக்கும்

நூர்டீன்மன்சூர் ஆகியோருடன் இராணுவ பொலீஸ் அரசஉயர் அதிகாரகளும் கண்காணிப்பாளர்களும் கலந்து கொண்டனர்.

(2ம் பக்கம் பார்க்க)

# விடுதலைப்புலிகள் அமைப்பை தமிழகத்தில் அனுமதிக்கக்கூடாது!

## செல்வி ஜெயா மத்திய அரசிடம் கோரிக்கை



விடுதலைப் புலிகள் இலங்கை அரசாங்கத்துடன் சமாதானப்பேச்சு வார்த்தையில் ஈடுபட தமிழகத்தில் இடமளிக்கக்கூடாதென அ.தி.மு.க பொதுச் செயலாளரும், முன்னாள் தமிழக முதலமைச்சருமான செல்வி ஜெயலலிதா மத்திய அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார். இதுகுறித்து தனது கடும் எதிர்ப்பை தெரிவித்து அறிக்கையொன்றை அவர் நேற்று வெளியிட்டுள்ளார். அவ்வறிக்கையில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

இந்தியா, அமெரிக்கா, அவுஸ்ரேலியா, கனடா மற்றும் பிரித்தானியா போன்ற நாடுகள் விடுதலைப் புலிகள் அமைப்பை தடைசெய்துள்ளன இவ்வாறு தடைசெய்யப்பட்ட புலிகள் அமைப்பை தமிழகத்தில் நுழைய அனுமதித்தால் அவர்களது ஆதரவாளர்களும் பிரிவினை வாதிகளும் உத்வேகம் பெறுவர். இதனால் இந்திய நாட்டின் பாதுகாப்புக்கும் ஒற்றுமைக்கும்,

(5ம் பக்கம் பார்க்க)

# மண்ணெண்ணெய் கடைகள் மாயமாய் மறைந்தன

(யாழ்ப்பாணம்)

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அங்கீகாரம் இன்றி தெருவோரங்களில் மண்ணெண்ணெய் மற்றும் எரிபொருட்களை விற்பனை செய்யும் கடைகள் மீது யாழ் செயலக விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் நேற்று திடீர் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இத்திடீர் சோதனை நடவடிக்கையை அடுத்து யாழ்ப்பாணம், சுன்னாகம், திருநெல்வேலி

(2ம் பக்கம் பார்க்க)

### அனுருத்தவின் புதல்வர்களின்

# முன் பிணை அனுமதி மனுவை உயர் நீதிமன்றம் நிராகரித்தது

(கொழும்பு)

கண்டி உடவளப்பிரதேசத்தில் தேர்தல் தினத்தன்று இடம்பெற்ற படுகொலை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் சி.ஐ.டியினர் தம்மை கைதுசெய்வதை தடுக்கு மாறு கோரி முன்னாள் பிரதி பாது காப்பு அமைச்சர் அனுருத்தவின் புதல்வர்கள் உயர்நீதிமன்றில் தாக்கல் செய்த மனுவை உயர்நீதிமன்று நேற்று நிராகரித்தது.

ரத்வத்தையின் புதல்வர்களான றோகான் ரத்வத்தை சானுக்க ரத்வத்தை ஆகிய இருவரும் மேற்படி மனுவை தாக்கல் செய்திருந்தனர். மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா இக்கொலைகள் தொடர்பாக பெல் தெனியா நீதிமன்றம் மேற்கொண்டிருக்கும் விசாரணைகளில் உயர்நீதி மன்றம் தலையிட முடியாது என தெரிவித்து இரு மனுக்களையும் நிராகரித்து தீர்ப்பளித்தார். (வ)

## பொங்குதமிழ் வெளியீடு

பொங்குதமிழ் நிகழ்வு தொடர்பாக குடாநாட்டு மக்களிடம் இருந்தும் ஏனைய பிரதேசங்களிலிருந்தும் பெறப்பட்ட எண்ண அலைகள் அடங்கிய கவிதை நூலும் ஒலிப்பதிவு நாடாவும் நாளை யாழ் பல்கலைக்கழகத்தில் இடம் பெறும் பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வில் வைத்துவெளியிடப்படவுள்ளது. இதேவேளை பொங்குதமிழ் தொடர்பாக வரலாற்று ஆவணங்கள் ஒன்றை வெளியிடுவதற்கான ஆயத்தங்களும் மேற்கொள்ளப்பட்டுவருவது இங்கு குறிப்பிடத்தக்கது

### குமார் – நிமால் – றோகண படுகொலை

# மீள்விசாரணை நடத்த சட்டமா அதிபர் உத்தரவு

(கொழும்பு)

படுகொலை செய்யப்பட்ட அகில இலங்கை தமிழ்காங்கிரஸ் தலைவர் குமார்பொன்னம்பலம், பத்திரிகையாளர் நிமலராஜன், றோகணகுமார ஆகியோரின் மரணம் சம்பந்தமாக மீள்விசாரணை ஒன்றை மேற்கொள்ளுமாறு குற்றத்தடுப்பு பொலீஸரை சட்டமா அதிபர் பணித்துள்ளார்.

மேற்படி மூவரின் படுகொலை தொடர்பாக புதிய விசாரணை மேற்கொள்ளவேண்டும் என அமைச்சர் குழு கேட்டுக்கொண்டதை அடுத்தே இப்புதிய விசாரணைக்கு சட்டமா அதிபர் கட்டளையிட்டுள்ளார். (வ)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### கலண்டர்

ஆனந்தா கிழமைக் கலண்டர் மேசையில் வைக்கக் கூடிய ஸ்ராண்டுடன்ரூபா45 - மட்டுமே படத்துடன் இணைத்து சுவரில் மாட்டக் கூடியதாகவும் அமைக்கலாம் அன்பளிப்புக்கு உகந்தது விசேட கழிவு தரப்படும். ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்துறைவீதி, யாழ்ப் பாணம் தொ.பே- 2820.

(சி-3274)

### தேவை

சகல வேலைகளும் செய்யக் கூடிய கொம்போசிற்றர் தேவை. பெண்பிள்ளை விரும் பத்தக்கது. நேரில் தொடர்பு கொள்ளவும் சரவணாஅச்சகம் 233,ஆஸ்பத்திரி வீதி, (சத்திரச் சந்திக்கு அருகாமை) யாழ்ப்பாணம். (C-3367)

## மண்ணெண்ணெய்

கல்வியங்காடு, கோப்பாய் அச்சுவேலி, பருத்தித்துறை, நீர்வேலி, மானிப்பாய், சங்கானை, சித்தங்கேணி, வட்டுக்கோட்டை உட்பட பல இடங்களிலும் இருந்த தெருவோர மண்ணெண்ணெய்க் கடைகள் அத்தனையும் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டதாக எமது பிரதேச செய்தியாளர்கள் அறிவித்துள்ளனர்.

யாழ் செயலக விலைக்கட்டுப்பாட்டதிகாரிகள் யாழ்ப்பாணப் பொலிசாரின் உதவியுடன் இத்திடீர் தோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். இந்நடவடிக்கைமேலும் தொடரவுள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (வ)

சாந்தனின் படைப்புக்கள்

# சமூக மாற்றங்களை பிரதிபலிக்கும் வரலாற்று ஆவணங்கள்

## அறிமுகஅரங்கில்பேராசிரியர்'சிவச்சந்திரன்

(யாழ்ப்பாணம்)

கடந்த மூன்று தசாப்தங்களில் எம் மண்ணில் இடம் பெற்ற அரசியல், சமூக பொருளாதார மாற்றங்களைப் பிரதிபலிக்கும் வரலாற்று ஆவணங்களாகசாந்தனின் படைப்புக்கள் விளங்குகின்றன.

இவ்வாறு யாழ்.பல்கலைக் கழகப்புவியியற்றுறைத்தலைவர் பேராசிரியர் இரா.சிவச் சந்திரன் கூறினார்.

கடந்த சனிக்கிழமை,யாழ். பல்கலைக் கழகத்தின் நூலகக் கேட்போர்கூடத்தில் கலாநிதி சி.சிவலிங்கராசா தலைமையில் இடம் பெற்ற சாந்தனின் நூல் அறிமுக அரங்கில் உரையாற்றுகையில் பேராசிரியர் இவ்வாறு கூறினார்.

சாந்தனின் எழுதப்பட்ட அத்தியாயங்கள் மற்றும் ஆங்கில நூல் ஆகியவை அங்கு அறிமுகம் செய்யப்பட்டன.

நூல்களிரண்டையும் அறிமுகம் செய்து வைத்துபேராசிரியர் சபா.ஜெபராசா உரையாற்றுகையில், சாந்தன் பொறியியல் துறை சார்ந்தவராக இருப்பதால் அவரது எழுத்துக்கள் தனிப் பரிமாணம் பெறுகின்றன என்றார்.

ஆங்கிலக்கதைத் தொகுதி பற்றிய ஆய்வுரை நிகழ்த்திய சட்டத்தரணிபொன்.பூலோகசிங்கம், சாந்தனின் கதைத் தொகுதி கடந்த இரு தசாப்தங்களில் தென்இலங்கையில் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட புனைகதைத் தொகுதிகளின் தரத்தை மிஞ்சுவதாக உள்ளதென ஆங்கிலத்தின் பிரபல விமர்சனர்கள்குறிப்பிடுவதை சுட்டிக் காட்டினார்.

நிகழ்வில் வி.பி.சிவநாதன் சட்டத்தரணி ந.ஜீவேஸ்வரா ஆகியோரும் ஆய்வுரைகளை நிகழ்த்தினர். (உ)

### இராணுவத் தரப்பு

முப்படைகளிலும் இருக்கின்ற ஊழல்களையும் ஊழல்வாதிகளையும் களைய முன்வர வேண்டும்.

ஊழலுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதில் கடந்த அரசாங்கம் தோல்வியடைந்ததாலேயே கடந்த தேர்தலில் பொதுமக்கள் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசை தோல்வியடையச் செய்தனர்

ஒரு சட்டவாதி என்ற வகையில் என்னால் படைத் தரப்பில் ஊழல் இருந்தமைக்கான தடயம் எதனையும் கண்டுபிடிக்க முடியவில்லை. எனினும் அங்கு பரவலாக ஊழல் இடம் பெற்றதை என்னால் உணரமுடிந்ததென்றும் அவர் கூறினார். (இ)

### வன்னிக்கான

நேற்றையதினம் அனுப்பி வைக்கப்பட்ட பொருட்களில் உணவுப்பொருட்களிலும் பார்க்க, துவிச்சக்கரவண்டிகள், ரயர்ரியூப்புக்கள் கூரை தகடுகள், அலுமினியப் பாத்திரங்கள் ரி.வி, றேடியோ மற்றும் மின் உபகரணங்களே அதிகமாக காணப்பட்டன.

இதேவேளை நேற்றைய தினம் மருந்துப்பொருட்கள் அனுப்பி வைக்கப்படவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத் தக்கது. (வ)

# கற்கோவளத்தில் உள்ள ஐஸ் ஆலையை புனரமைக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கடற்றொழிலாளர் எத்தகைய தடையுமின்றி அன்றாடம் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதற்கு கடல் பாதுகாப்பு வலயக் கட்டுப்பாடுஅடியோடு நீக்கப்பட வேண்டும் என்று வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம்யாழ். குடாநாட்டிற்கு வருகைதந்திருந்த புனர்வாழ்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனாவிடம் கையளித்துள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படிகட்டுப்பாட்டினால் வடமராட்சி வடக்குப் பகுதியில் இடம் பெயர்ந்திருக்கும் வடமராட்சிகிழக்குவலிகாமம் வடக்குப் பகுதி மீனவர் உட்பட அனைத்து மீனவர் குடும்பங்களும் நாளாந்தம் பலகஷ்டங்களை எதிர்நோக்கிவருவதாக அம்மகஜரில்சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வெளியிணைப்பு இயந்திரப் படகுகள் மூலம் மீன்பிடிக்க அனுமதிவழங்குவதோடுஅவற்றிற்கான எரிபொருள் எத்தகைய கட்டுப்பாடும் இல்லாது நிதான விலைக்கு விற்கப்பட வேண்டும்.

போதுமான மீன்பிடிஉபகரணங்களை எடுத்து வருவதற்கும், கண்ணாடி இழைப்படகுகளில்மீன்பிடிக்கவும் அனுமதி வழங்க வேண்டும்.

வீடுகளையும், மீன்பிடி உபகரணங்களையும் மற்றும் சொத்துக்களை இழந்த மீனவர்களுக்கு நட்ட ஈடு வழங்க வேண்டும். அத்துடன் அவர்களுக்குப் போதுமான கடன் வசதிகள் உடனடியாகசெய்து கொடுக்கப்படவேண்டும்.

கடல் பாதுகாப்பு வலயக் கட்டுப்பாடு நீக்கப்பட்டால் மீன்களுக்கு ஐஸ் இடுவதற்கு கற்கோவளத்தில் இருந்த ஐஸ் தொழிற்சாலை புனரமைக்கப்பட வேண்டும் ஆகிய கோரிக்கைகள் அம் மகஜரில் முன்வைக்கப்பட்டுள்ளன. (எ)

## சுழிபுரம் வாசியை

## காணவில்லை

(யாழ்ப்பாணம்)

கடந்த 4 ந்திகதி வீட்டிலிருந்து வேலைக்குப் புறப்பட்டுச் சென்றவர் இதுவரை வீடு திரும்பவில்லையென்று அவரது உறவினர்களால் யாழ் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சுழிபுரம் செழுக்கப்புலத்தைச் சேர்ந்த கண்ணுத்துரை மகேந்திரன் (வயது-54) என்பவரே காணாமல் போயுள்ளதாகமுறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

யாழ்ப்பாணம் - மாநகரசபை

## விளம்பர சேவை நடாத்துவதற்கான கேள்வி அறிவித்தல் 2002

கீழ்க்காணப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக யாழ். மாநகரசபையின் நவீன சந்தையில் அமைந்துள்ள கடை இல. 167ஐ 11-02-2002ந் திகதி தொடக்கம் 31-12-2002ந் திகதி வரையான காலப் பகுதிக்கு தற்காலிக விளம்பரசேவை நடாத்துவதற்காக குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் ப்டிவக் கட்டணம் ரூபா 281.25 (ஜி. எஸ். ரி. உட்பட)வும், கேள்விப்பிணைப்பணம் ரூபா 2500/-வும் செலுத்துவதன் பேரில் 24-01-2002ந் திகதி வியாழக்கிழமை பி.ப. 3.00 மணி வரை கேள்விப் படிவங்களை இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விகளை எதிர்வரும் 25-01-2002ந் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணிக்கு முன் இச்சபையில் கிடைக்கக் கூடியதாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அதே தினம் பி.ப. 2.30 மணிக்கு கிடைக்கப் பெற்ற கேள்விகள் யாவும் திறந்து பரிசீலிக்கப்படும்.

நிபந்தனைகளில் பின்வருவனவும் அடங்கும்.

01. சபையால் விதிக்கப்படும் சட்ட திட்டங்களுக்கு அமைவாக விளம்பர சேவை நடாத்தப்படல் வேண்டும்.

02. குறித்த நிலையத்துக்கான மாதாந்த வாடகை ரூபா 500/-வும் அதற்கான ஜி. எஸ். ரி.யும் சேர்த்து ஒவ்வொரு மாதமும் செலுத்தப்படல் வேண்டும்.

03. குறித்த விளம்பர சேவையின் ஒப்பந்தம் 31-12-2002ந் திகதியுடன் முடிவுறுத்தப்படும்.

04. காவற்றுறையினரின் அங்கீகாரம் பெற்ற பின்பே விளம்பர சேவை நடாத்தப்படல் வேண்டும்.

விளம்பர சேவை நடாத்துவதற்காக ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித்தொகை ரூபா 300000/- ஆகும். (ஜி. எஸ். ரி. நீங்கலாக) மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**இ. இராமலிங்கம்**
மாநகர ஆணையாளர்,
மாநகரசபை.

யாழ். மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

(C 3279)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

## முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீட முதலாம் அரையாண்டுப் பரீட்சைகள் கல்வியாண்டு 2001 / 2002

முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடத்தின் பின்வரும் BAd / B.Com அரையாண்டுப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் யாவும்மாணவரிடம் இருந்து 25.01.2002 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

(1) முதலாம் வருடம்
(2) இரண்டாம்வருடம்
(3) மூன்றாம் வருடம்

மீள் பரீட்சைக்குத் தோற்றுவோர் ஒரு பாடத்துக்கு ரூபா 50/ வீதம் பல்கலைக்கழக காசாளரிடமோ அல்லது பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையிலோ செலுத்திய பற்றுச் சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும். விண்ணப்ப படிவங்களை17.01.2002 ஆம் திகதி முதல் முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீட பீடாதிபதி அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பீடாதிபதி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு மாணவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பதிவாளர்

(C 3277)

## மரண அறிவித்தல்

### திருமதி ஜெயலெட்சுமி சிவப்பிரகாசம்

(மண்டைதீவு)

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் மண்டைதீவை வதிவிடமாகவும் கச்சேரியடியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஜெயலெட்சுமி சிவப்பிரகாசம் (முன்னாள் ஆசிரியை) 10-01-2002 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்புமகளும் காலஞ்சென்ற கந்தையா-மாரிமுத்துவின் மருமகளும் காலஞ்சென்ற தலைமை ஆசிரியர் சிவப்பிரகாசத்தின் அன்புமனைவியும் காலஞ்சென்ற தலைமை ஆசிரியர் மகாதேவனின் அருமைச் சகோதரியும், சிவகுமார் (கனடா), சந்திரகலா (கனடா), ஸ்ரீகுமார்(சுவிஸ்), ஜெயகௌரி (பிரான்ஸ்) காலஞ்செனற ஜெயக்குமார், சசிகுமார் (லண்டன்), தவமலர் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஸ்ரீரவீந்திரராசா (பிரான்ஸ்), குகதாஸன் (கனடா), சுதாகர் (சவூதி), ஜானகி (கனடா) பத்மாவதி, (சுவிஸ்), துஷயந்தி (லண்டன்) ஆகியோரின் மாமியும் வை. ராஜம்மா, காலஞ்சென்ற செ. நாகபூரணம், ம. அன்னலெட்சுமி ஆகியோரின் மைத்துனியும் ரஜிதா, அனோஜன், ஜியானி, ஆதவன், அபிநயா, பிரணவன், மயூரன், காயத்ரி, நிலூஜனா, கீர்த்தனா, ஆகியோரின பேர்த்தியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17-01-2002) வியாழக்கிழமை 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப் படும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்

**செ. பரமநாதன்**
(மருமகன்)

இல. 9, கச்சேரி லேன்,
கச்சேரி.

(4239)

# அன்பும் பண்பும் வளர்ந்து சமாதானம் விளங்க

# விவேகானந்தரின் போதனைகள் வழிகாட்டும்

ஆன்மீக வாரத்தை யொட்டி இக் கட்டுரை பிரசுரமாகிறது.

**த. மனோகரன்**
துணைத் தலைவர்
அகில இலங்கை இந்துமா மன்றம்

சமய வாழ்வு என்பது சம்பிரதாயங்களைக் கடைப்பிடிப்பது என்பதல்ல. சமூக நலனுக்காக உழைப்பதுமாகும் என்பதைத் தெளிவாக எடுத்துக் கூறி, செயல் வடிவம் தந்தவர் சுவாமி விவேகானந்தர். காலத்திற்குக் காலம் இந்து சமய மறு மலர்ச்சியை ஏற்படுத்தி சமயத்திற்குப் புத்துணர்வும், எழுச்சியும் வழங்கிய மகான்கள் வரிசையிலே விவேகானந்தர் சிறப்பிடம் பெறுகின்றார்.

**சமயத்தை சமூக மயமாக்கினார்**

சமய அறிவோ, தெளிவோ அற்ற நிலையில் வழக்கத்திலிருக்கும் சம்பிரதாயங்களை மட்டும் கைக்கொண்டு வாழ்ந்த இந்து சமூகத்தில் சமூகத் தோடொட்டிய சமய வாழ்வு எவ்வாறு அமைய வேண்டும் என்பதைத் தெளிவுறுத்தியதன் மூலம் சமயத்தைச்சமூகமயப்படுத்தியபெருமையும் விவேகானந்தருக்குரியது.

சமயம் காட்டும் உயர்ந்த வழியில் செயற்பட்டு சமூகத்தைப் பண்படுத்தி, உயர் நிலை எட்ட சுவாமிகள் இட்ட அடித்தளம் தொய்ந்து போயிருந்த இந்து சமுதாயத்தை உலக அரங்கில் புத்துணர்வுடன் தலை நிமிரச் செய்தது.

மனிதனின் அடிப்படைத் தேவைகளைப் பெற்றுக் கொடுத்து அவன் ஒழுக்கம் மிக்கவனாகவும், சமுதாயப் பற்றுமிக்கவனாகவும் சமூகத்தை வழி நடத்து பவனாகவும் வாழ வேண்டும். இதுவே சமய வாழ்வு என்பதை உறுதிபட எடுத்துக் காட்டிய சுவாமி உலக மக்கள் யாவரையும் ஒரே இறைவனின் படைப்புக்கள், பிள்ளைகள் என்ற இந்து சமய அடிப்படைத்தத்துவத்தில் அசையா உறுதி உடையவராகச் செயற்பட்டவராவார்.

**தெய்வம் ஒன்றே**

''சத்தியே பராபரம்
ஒன்றே தெய்வம்
சகல உயிர் ஜீவனும்
அது தானாச்சு
புத்தியினால் அறிந்தவர்கள்
புண்ணியோர்கள்
பூதலத்தில் கோடியிலே
ஒருவனுண்டு
பக்தியிலே மனதை
வைப்பான் பரமஞானி
பாழிலே மனதை
விடான் பரமயோகி''

என்ற சித்தர் பாடலுக்கு விளக்கமாக விளங்கிய பரமஞானியாகிய விவேகானந்தர் தெய்வம் ஒன்றே, சகல உயிர் ஜீவன்களும் அத்தெய்வத்துள் அடக்கம் என்ற இந்து சமய அடிப்படைத் தத்துவத்தை உள்ளத்தில் உறுதியாக இருத்தியதன் வெளிப்பாடே அமெரிக்க சிக்காக்கோ நகரில் நடந்த சர்வ சமய மகாநாட்டில் ஆற்றிய உலகம் போற்றி வியக்கும் சொற் பொழிவாகும்.

சமயத்தின் பேரில் மனிதனை மனிதன் கூறுபடுத்திப் போட்டி, பொறாமைகளையும் பகையுணர்வுகளையும் வளர்த்து வருவதில் அர்த்தமில்லை. ஒன்றே தெய்வம் ஒருவனே தேவன் என்ற நம் தமிழ் வாக்கின் அடிப்படையில் ஆழச்சிந்தித்துப்பார்க்க வேண்டும். அன்பே சிவம் ஒன்றே குலம் என்ற நமது பரந்ததத்துவத்தைஉணர்ந்து நாம் நம்மை, நமது உள்ளங்களைப் பண்படுத்திக் கொள்ள வேண்டும்.

**மறைந்திருந்த தத்துவம்**

சுவாமி விவேகானந்தரின் வாழ்வும், போதனைகளும் மனிதகுலம் மாண்புற ஏற்ற எடுத்துக் காட்டுகளாக விளங்குகின்றன. உள்ளத்தில் உறுதி கொண்ட கொள்கையில் தெளிவு அதனைச் செயற்படுத்தும் ஆற்றல் அதன் பலாபலன்களைக் கண்டு மகிழ்வுறும் மனம் கொண்டவர்களாக சமுதாயம் திகழ சுவாமிகளின் வழிகாட்டல் பேருதவிபுரியும். மனிதனை மனிதனாக மட்டு மல்ல தெய்வமாக மாற்றும் ஆற்றல் விவேகானந்தரின் வழியில் செயற்பட்டால் ஏற்படும்.

அன்பு அது மனிதனின் பண்பாக அமைய வேண்டும். சுவாமிகளின் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற இந்து சமயக் கோட்பாடும் எமக்குப் புதியதல்ல. மறைந்திருந்த தத்துவம் சுவாமிகளால் மீண்டும் தெளிவுறுத்தப்பட்டது.

நாம் இறைவனைப்பாடித் தொழுதபின் செந்தமிழால் என்ன வேண்டுதல் செய்கின்றோம்? தென்னாடுடைய சிவனேபோற்றியென்று இறைவனைப் போற்றிவாழ்த்திய பின் எந்நாட்டவருக்கும் இறைவா போற்றி என்று நாடு, இனம், மதம், மொழி கடந்து உலகமக்கள் யாவருக்கும் இறைவா உன்னருள் கிட்டவேண்டும்என்று வேண்டுதல் செய்கின்றோம்.

அடுத்து என்ன வேண்டுதல் செய்கின்றோம்? இன்பமேசூழ்கஎல்லோரும் வாழ்க என்று வாழ்த்துகின்றோம்.

இந்து சமயதத்துவம் மேற்படி நான்கு வாக்கியங்களில், பிரார்த்தனையில் அடங்கி விட்டதல்லவா? சுவாமி விவேகானந்தரின் போதனையும் நமது பிரார்த்தனையை ஒட்டிய விரிவான விளக்கமென்பதைநாம்உணர்ந்துகொள்ள வேண்டும்.

**ஒரு தாய் மக்களாய் வாழ வேண்டும்**

சர்வசமய சபையிலே சகல சமயத்த வரையும் ஒன்றாகவே நோக்கி சகோதர, சகோதரிகளே என்று விளித்த சுவாமிகளின் கூற்று மனித சமுதாயம் வேறுபட்டு மாறுபட்டு நிற்பது தவறானது. ஒருதாய் மக்களாக வாழ வேண்டும் என்ற அடிநாதத்தைக்கொண்டது.

ஞானத்தந்தையாக பகவான் இராமகிருஷ்ணரையும், ஞானத்தாயாக அன்னை சாரதா தேவியாரையும் கொண்ட சுவாமி விவேகானந்தர் கல்வியில் சமுதாயம் முன்னேறவேண்டியதையும், பொருளாதார தன்னிறைவு பற்றியும் தெளிவான கொள்கை கொண்டவராக இருந்தார்.

சுவாமிகளின் கல்விக்கொள்கைக்கமைய இராமகிருஷ்ண மிஷனால் தொடங்கப்பட்ட திருகோணமலை இராமகிருஷ்ணமிஷன் இந்துக் கல்லூரி, மட்டக்களப்பு சிவானந்தா கல்லூரி உட்பட பல பாடசாலைகள் கிழக்கிலங்கையில் இந்து சமயத்தின் வளத்திற்கும், வளர்ச்சிக்கும் நிலைக்களங்களாக விளங்குகின்றன.

இராமகிருஷ்ணமிஷன்கிழக்கிலங்கையில் கல்விப்பணியை ஆரம்பிக்காதிருந்தால் இன்று கிழக்கிலங்கையில் இந்துசமயமும், இந்து சமுதாயமும் அழிவு நிலையை ஒட்டியிருக்கும். சுவாமி விவேகானந்தரின் சிந்தனைகள் நடைமுறையில் செயற்பட்டமை கிழக்கிலங்கையில் இந்துசமயஎழுச்சிக்கு வித்திட்டது என்பதை மறக்க முடியாது.

சமயத்தின் பெயரால் சண்டையிடும் இவ்வுலகில் சமாதானம் நிலவி மக்கள் நிம்மதியாக வாழ விவேகானந்தரின் போதனைகள் பரவி மக்களை பண்பும், அன்பும் கொண்டவர்களாகப் பண்படுத்தவேண்டும்.

## பலசரக்கு கடையில் திருட்டு

(யாழ்ப்பாணம்)

கல்வியங்காட்டுச் சந்தை பகுதியில் அமைந்துள்ள சின்னத்துரைசரவணபவானந்தன் என்பவருக்கு சொந்தமான பலசரக்குக் கடை நேற்று முன்தினம் இரவு திருடர்களின் கைவரிசைக்கு இலக்காகியுள்ளது.

இங்கு பல ஆயிரம் ரூபா பெறுமதியான உணவுப் பொருட்களை கள்வர் கையாடிச் சென்றுள்ளதாகவும், கடந்தவாரமும் இப் பகுதியிலுள்ள யாழ்.ப.நோ.கூ.ச. கிளையில் திருட்டு இடம் பெற்றதாகவும் கூறப்படுகிறது. (உ-10-19)

## வெளிவாரிப் பரீட்சை

(வண்ணார்பண்ணை)

யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சை அலகினால் நடத்தப்படும் வணிகமாணி பகுதி 2 க்கான பரீட்சைகள் எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகி 28 ஆம் திகதி திங்கட்கிழமை வரை நடைபெறும் என வெளிவாரி பரீட்சை அலகு அறிவித்துள்ளது. (உ-109)

## மத்திய கல்லூரி ஆசிரியர்களுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரியில் கற்பிக்கும் ஆசிரியர்கள் அனைவரையும் நாளை வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு அலுவலகத்திற்குச் சமுகமளிக்கும்படி அதிபர் க. இராசதுரை அறிவித்துள்ளார். (உ)

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் கூட்டம் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9. 30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

இதில் தரம்'சி' யில் சித்தியடைந்தவர்களும்தரம் பி,சிப் பரீட்சையில் தோற்றிய அனைவரையும் கலந்துகொள்ளுமாறு சங்கத்தலைவிதிருமதி ரூபசிங்கம் அறிவித்துள்ளார். (உ-10,19)

# இந்துக்கள் மதம் மாற்றப்படுவதற்கு

# அமைச்சர் மகேஸ்வரன் கண்டனம்

### தடுத்து நிறுத்துவதன் அவசியத்தையும் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் கடந்த ஐந்து ஆண்டு காலமாக மதம்மாற்றும் நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வறுமை நிலைமையைப் பயன்படுத்தி இந்துமக்கள் பலர் மதம் மாற்றப்படுகின்றனர். இது தடுத்து நிறுத்தப்படா விட்டால் எமது சமூகத்தில் பல விபரீதமான விளைவுகள் ஏற்படும் என்று இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் எச்சரித்துள்ளார்.



நல்லூர் ஸ்ரீதுர்க்காதேவி மணிமண்டபத்தில் திங்கட்கிழமை மாலை நடைபெற்ற பொங்கல்விழா கலைநிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது.

கடந்த 20 ஆண்டுகாலமாக எமது இனம் அவலம் நிறைந்த வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறது தமது கலை கலாசாரங்களை கைவிட்ட நிலையில் பல முறை இடம்பெயர்வுகளால் அல்லல்களை எதிர்நோக்கியுள்ளது.

கடந்த 7ஆண்டுகால ஆட்சி மிகவும் கொடூரமான விளைவுகளை இந்த நாட்டில் ஏற்படுத்திவிட்டது.

எமது மக்களுக்கு சமயமோ மொழியோ பெரிய பிரச்சினையாக இல்லை அவர்களும் இந்தநாட்டில் ஏனைய இனங்களுடன் சரிசமனாக வாழ்வதையே விரும்புகிறார்கள்.

புதிய அரசு பதவிஏற்றதன் பின் நிரந்தர சமாதானத்தையும் நிரந்தர யுத்த நிறுத்தத்தையும் மக்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள்.

எனது பதவிக்காலத்தில் எமது சமய மறுமலர்ச்சிக்கு ஆவன செய்ய திடசங்கற்பம் பூண்டுள்ளேன் இந்தியாவில் இருந்து சமயப் பிரசாரகர்களையும் சைவச் சான்றோர்களையும் அழைத்துவந்து பல்வேறு நிகழ்வுகளை நடத்த முயற்சி மேற்கொண்டுள்ளேன் என்றார். (உ-106)

## மாண்ட மனிதர்..

ரதுஉடல் கொண்டுவரப்பட்டு தகனத்திற்காக வாகனத்தில் ஏற்றப்பட்ட போது அவர் சுவாசிக்கத் தொடங்கவே அவரை மீண்டும் வைத்திய சாலையில் அனுமதித்துள்ளதாகவும் மேலும் தெரியவந்துள்ளது. (உ. 8)

# ஜனாதிபதி, பிரதமர் முரளிக்கு பாராட்டு

(கொழும்பு)

இலங்கை அணியின் சுழல் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் 400 டெஸ்ட் விக்கெட்டுக்களை வீழ்த்தியதைப் பாராட்டி இலங்கையின் ஜனாதிபதியும் பிரதமரும் வாழ்த்துச் செய்திளை அனுப்பி வைத்துள்ளனர்.

124 ஆண்டு கால இலங்கையின் கிரிக்கெட் வரலாற்றில் முரளிதரன் ஏற்படுத்திய சாதனை உண்மையில் வியப்புக்குரியது.

இதன் ஊடாக இலங்கையில் உள்ள அனைத்து மக்களும் பெருமைப்படுகின்றனர் இச் சாதனையின் மூலம் எம் நாட்டிற்கு முரளி புகழை தேடித் தந்துள்ளதாக ஜனாதிபதி தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

பிரதமர் தனது வாழ்த்துச் செய்தியில் முரளிதரனுக்கு மட்டுமன்றி இலங்கைக்கு க் கிடைத்த புகழ் இது என்று குறிப்பிட்டுள்ளார். (உ-10)

# சிசு உதான பாடசாலை வங்கித் திட்டம் நடைமுறை

(கொழும்பு)

நாட்டிலுள்ள சகல பாடசாலைகளிலும் கல்வி கற்கும் மாணவர்கள் மத்தியில்சேமிப்புப் பழக்கத்தைஊக்குவிக்கும் நோக்கத்துடன் ''சிசு உதான பாடசாலை வங்கி'' கல்வி அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் நூறு நாள் துரித அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கு அமைய கல்வி அமைச்சும் மக்கள் வங்கியும் இணைந்து இதனை நடைமுறைப்படுத்தியுள்ளது.

மாணவர்கள் மத்தியில் சேமிப்புத் திட்டத்தை ஊக்குவிக்கும் இத் திட்டத்தில் ஆரம்ப நடவடிக்கையாக 100 பாடசாலைகளில் வங்கிக் கிளைகள் திறக்கப்படவுள்ளன. (உ-8)

### எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல்களில்

# இடதுசாரிகளை ஒன்றிணைந்து போட்டியிட வாசுதேவ வற்புறுத்து

(கொழும்பு)

பொ.ஐ.மு வெற்றிபெற்றிருந்தால் ஒரு பேரினவாத சர்வாதிகார அரசாங்கமே அமைந்திருக்கும். அதில் ம வி.மு.யும் முக்கியபங்கைவகித்திருக்கும். அத்தகைய போக்கை வலியுறுத்தும் கொள்கைகளையே அக்கட்சிகள்பிரசாரம் செய்து வந்தன.

இவ்வாறு ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார அறிக்கையொன்றின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

இனவாத பிரசாரத்தைமுன்னெடுத்த ம.வி.மு.,பொ.ஐ. முன்னணியினதும்,சிஹலஉறுமயவினதும், ஐ.தே.க. எதிர்ப்பு தீவிரவாத வாக்குகளையும் பெற்று 16 ஆசனங்களை பெற்றது.

தகுதிகாண்அரசாங்கம் என்னும் அடிப்படையில்ஏற்படுத்தப்பட்ட கூட்டின் இனவாத மற்றும் சர்வாதிகார பிரசாரம் தேர்தல் காலத்தில் அப்பட்டமாக தெரியாத விதத்தில் ம.வி.மு, தனது ஏகாதிபத்திய எதிர்ப்புச் சுலோகங்களை உரத்து உச்சரித்தது. இதனால் அது தன்னை இடதுசாரியெனவும் காட்டிக் கொண்டது.

தேர்தலில் பொ.ஐ.மு. யுடன் இணைந்து கொண்டிருந்த இடதுசாரிகள் படுதோல்வியடைந்துள்ளனர். சுதந்திரமாக போட்டியிட்ட இடதுசாரிகளும் படுதோல்வியை அடைந்தன. இக்கட்சிகள் யாவுமே தமது நத்தைகளின் காரணமாக ஒருஇனவாத சர்வாதிகார ஆட்சியை பதவியிலமர்த்துவதற்கு நேரடியாகவே மறைமுகமாகவோ உதவியுள்ளன.

இந்நிலையில் இடதுசாரிக் கட்சிகள் யாவும் மீள ஒன்றுபடல் வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்றுள்ளது. ஒரு பொது வேலைத்திட்டத்தை வகுத்து, இடதுசாரிகள் வரவிருக்கின்ற உள்ளூராட்சித் தேர்தல்களில் போட்டியிடல் வேண்டும்இவ்வாறு அறிக்கையில்தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

### ஆசிய அபிவிருத்தி வங்கி

## வவுனியா மாவட்டத்திற்கு 100 மில்லியன் அன்பளிப்பு

(கொழும்பு)

வவுனியா மாவட்டத்தில் சுகாதாரசேவையை மேம்படுத்துவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி 100 மில்லியன் ரூபாவை வழங்க முன்வந்துள்ளது.

வவுனியா மாவட்ட சுகாதார சேவைகள்பணிப்பாளர் டாக்டர் திருமதி எஸ்.யோகநாதன் நேற்று முன்தினம் இதனைத் தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களின் பல்வேறுபகுதிகளிலிருந்தும் இடம்பெயர்ந்து கூடுதலான மக்கள் இங்குவாழ்ந்து வருவதனாலேயே ஆசிய அபிவிருத்தி வங்கி உதவமுன்வந்திருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-8)

## தீவக பிரதேச மட்டத்தில் மீன்பிடி சமாசம்

(வண்ணார்பண்ணை)

தீவுப்பகுதி தெற்கு வேலணைப் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட மீனவர் சங்கங்களைப்புனரமைப்பதுடன், அவற்றை ஒருங்கிணைத்து மீன் பிடித்துறையை அபிவிருத்தி செய்வது தொடர்பான கூட்டம் அண்மையில் மேற்படி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இப்பகுதியில் இயங்காதுள்ள மீன்பிடிச் சங்கங்களின் செயற்பாடுகளை இடைநிறுத்துவதுடன்புங்குடுதீவில்-3வேலணையில்-3,அல்லைப்பிட்டியில்-1, நயினாதீவில்-2 மீனவர் சங்கம்திறம்பட இயங்குவதாக இனம் காணப்பட்டு அவற்றின் சேவைகளை விஸ்தரிப்பதெனமுடிவு செய்யப்பட்டது.

இதேவேளை,பிரதேச மட்டத்தில் மீன்பிடி சமாசம் ஒன்றை அமைப்பதற்குஉடன் நடவடிக்கை எடுப்பதெனவும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (உ-109)

## பொன்னாலை பாலத்தில் மீன் பிடிக்க அனுமதி

காரைநகர்பொன்னாலைப் பாலத்தின் தெற்குப் பகுதியில்

இதனால் அதிகமான மீனவர்களுக்கு களங்கண்ணி மற்றும்

## திரைப்பட தொழிநுட்ப வகுப்பு

(யாழ்ப்பாணம்)

திரைக்கலைச் சங்கங்களின் சம்மேளனமான சலனசித்திரம் நிறுவனத்தின் யாழ்ப்பாணக் கிளையினால் நடத்தப்பட்டு வரும்இலவசதிரைப்பட தொழிநுட்ப வகுப்புக்களில் இன்று புதன்கிழமையும் நாளை வியாழக்கிழமையும் இசை, நடிப்பு, ஒலி ஒளி சம்பந்தமானவிரிவுரைகள் ஆரியகுளம் சந்தியிலுள்ள புதிய உயர் கல்லூரியில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளன.

இத்துறை சம்பந்தமாக ஆர்வமுடையோர் எவரும் இவ்வகுப்பில்கலந்து கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-106)

## மா விரைவில் வரும்

(யாழ்ப்பாணம்)

கோமாரி கப்பல் மூலம் யாழ். குடாநாட்டுக்கு விரைவில் மா எடுத்துவரப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகள் தற்போது நடைபெற்று வருகின்றன. (உ)

### கட்டுப்பாடுகள்

## தளர்வு

(கொழும்பு)

அரிசி, மிளகாய், பம்பாய் வெங்காயம், சின்ன வெங்காயம், உருளைக்கிழங்கு என்பவற்றின் இறக்குமதியில் இருந்தகட்டுப்பாடுகள்முற்றாகத் தளர்த்தப்பட்டு, தேவையான அளவு இறக்குமதி செய்ய இறக்குமதியாளர்

---

### வலம்புரியின் ஆதரவில்

மூத்தபத்திரிகையாளர்

## அமரர் சி. செல்லத்துரை

அவர்களின்

ஞாபகார்த்தமாக நடத்தப்பட்ட

### சிறுவர் பாடல்

## போட்டி முடிவுகள்

**சான்றிதழ் பெறுபவர்களின் பெயர் விபரம்**

(நேற்றைய தொடர்ச்சி)

ந. மோகனரூபன்
''இலங்கை எமது தீவு''
3ஆம் வட்டாரம், நயினாதீவு.

நிவேதிகா
''சேர்ந்து பாடுவோம்''
துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.

கு. துரைராஜா
''சின்னப் பூனை''
உரும்பிராய் இந்துக் கல்லூரி, உரும்பிராய்.

மானியூர் ரட்ணேஸ்
''நாளை நமக்காக''
5, பெற்றிக்கோஸ் லேன், கண்டிவீதி, யாழ்ப்பாணம்.

சி. ஆரூரன்
''மனித மாடுகள்''
இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்.

நா. தவராஜா
''விழித்திடுவோம் தம்பி''
4 ஆம், குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

எஸ். பாலதேவி
''வெண்ணிலவே வெண்ணிலவே''
மே/பா எம். மகேந்திரம், லவ் லேன், உடுவில்.

எம். ஜி. கணேஸவேல்
''யுத்தக் கொடுமைக்கு முடிவில்லையா''
25, ஓட்டுமடம் வீதி, யாழ்ப்பாணம்.

திருமதி பா. பூங்கோதை
''நிலவுக்கு ஒரு பாஸ் தருவீரா''
பிரம்படி லேன், கொக்குவில்.

ரீ. ரீ. மயூரன்
''வாருங்கள் வாருங்கள் தம்பிகளா''
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

திருமதி செ. பவானி
''நல்லவர்களாய்''
20, பி. ஏ. தம்பிலேன், யாழ்ப்பாணம்.

கு. சிவகுமார்
''மாரி காலம்''
கணேஸ் வாசம், மயிலணி, சுன்னாகம்.

கே. ஆர். திருத்துவராஜா
''காகமும் முயலும்''
ரோஸ் பவனம், அல்வாய் வடக்கு, அல்வாய்.

கவிமணி இ. சிறீதரன்
''தூது செல்வாய் கிளியே''
24 4, மதவடி ஒழுங்கை நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

அபிராஜன்
''ஆண்டவன் தோட்டத்து மலர்கள்''
49, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

## பொன்னாலை பாலத்தில் மீன் பிடிக்க அனுமதி

காரைநகர்பொன்னாலைப் பாலத்தின் தெற்குப் பகுதியில் பல வருடங்களின் பின்னர் மீன் பிடிப்பதற்கு கடற்படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

இதனால் அதிகமான மீனவர்கள் களங்கண்ணி, மற்றும் கட்டுமரம் மூலமும் மீன் பிடி தொழிலில் ஈடுபட்டுள்ளமை இங்கு காணக்கூடியதாகவுள்ளது. (உ-109)

யம், உருளைக்கிழங்கு என்பவற்றின் இறக்குமதியில் இருந்தகட்டுப்பாடுகள்முற்றாகத் தளர்த்தப்பட்டு, தேவையான அளவு இறக்குமதி செய்ய இறக்குமதியாளர் அனுமதிக்கப்படவுள்ளதாக வர்த்தக நுகர்ச்சிச் சேவை அமைச்சர் ரவி கருணாநாயக்கா தெரிவித்துள்ளார். (உ-225)

### புதிய அரசு தனது நல்லெண்ணத்தை வெளிப்படுத்த

# தமிழ் தேசியஇனத்தின்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை வழங்கவேண்டும்

## இரா.சம்பந்தன் இப்படியொரு நிபந்தனை

(கொழும்பு)

ஆட்சிபீடமேறியிருக்கும் பேரினவாத ஆட்சியாளர்களுக்கும் எதிர்க்கட்சியினருக்கும் நாட்டில் சமாதானம் ஏற்பட வேண்டுமென்ற எண்ணம் இருக்குமாயின் தமிழ்த் தேசிய இனத்திற்கு நிரந்தர தீர்வை வழங்குவதற்கு சம்மதம் தெரிவித்தல் வேண்டும்.

இவ்வாறுதமிழர்விடுதலைக் கூட்டணியின் செயலாளரும் திருமலை மாவட்ட பாராளுமன்றஉறுப்பினருமான இரா. சம்பந்தன்தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினமிரவு லண்டன் பி. பி.சி.க்கு வழங்கிய பேட்டியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அப்பேட்டியில் மேலும் தெரிவித்திருப்பதாவது; தமிழ்மக்களின் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமாயின்திம்புகோட்பாட்டடிப்படையிலேயே தீர்க்கப்பட வேண்டும்.

அதாவது; தமிழ்மக்கள் தனித்தேசிய இனம் என்பதையும், அவர்களுக்கு மரபுவழித் தாயகம்உண்டு என்பதையும் சுயநிர்ணய உரிமையை வழங்கவேண்டும் என்ற அம்சங்களின் அடிப்படையிலேயே பேச்சு அமைய வேண்டும்.

இக் கோட்பாட்டை அரசாங்கம் புறம் தள்ளக்கூடிய சூழ்நிலையும் தற்போது இல்லை எனினும் இதன் அடிப்படையில் பேச்சு நடைபெற கூட்டமைப்பினராகிய நாம் தொடர்ந்து வலியுறுத்துவோம்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்காக நடைபெற்றுக் கொண்டிக்கின்ற சமாதானப் பேச்சுவார்த்தை வெற்றியடையுமோ, அல்லது தோல்வியடையுமோஎன எதிர்வுகூறுவதைவிட பேச்சுக்கள் வெற்றிகரமாக நடைபெற அனைத்து தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும்.

இதன் மூலமேதமிழ்மக்களின் எண்ணம் ஓரளவு உறுதிப்பாட்டையடைய முடியும் எனவும் அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-4)

24 4, மதவடி ஒழுங்கை நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

அபிராஜன்
''ஆண்டவன் தோட்டத்து மலர்கள்''
49, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

த. தனுஜன்
''எம்மை வதைக்காதிர்''
யாழ். இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்.

மு. நிஷாந்தி
''வாழ வழி தேடுது''
மூளாய் றோட், சுழிபுரம்.

க. சிறிமோகன்
''ஊக்கமே உயர்வு தரும்''
521/5, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

ரி. பாரதி
''திட்டமுடன் படித்திடுவேன்''
மே/பா . தங்கவேலாயுதம், மணியந்தெணி,
வியாபாரி மூலை, பருத்தித்துறை.

வி. விஜியதீபா
''நாங்கள் வாழ்த்திடுவோம்''
4 ஆம், வட்டாரம், யாழ்ப்பாணம்.

நெல்லை மகேஸ்வரி
''புதிய கீதங்கள்''
அருணோதயம், கோட்டைத்தெரு,
நெல்லியடி.

கந்த தியாகராஜா
''உலகம் வாழ்த்தும் பாரு''
ஆலடி வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

த. தர்மினி
''தண்டனை கொள்வதோ''
தெய்வக்கேணி வீதி, சரசாலை தெற்கு, சரசாலை.

தி. கலைச்செல்வன்
''எங்கள் எம்.பி.''
இமையாணன், உடுப்பிட்டி.

# எரிபொருள் விநியோகம் தொடர்பான கூட்டம்

## நேற்று செயலகத்தில்

(தென்மராட்சி)

யாழ். குடாநாட்டு மக்களுக்கான எரிபொருள் விநியோகத்தை சீர்படுத்துவது தொடர்பான கூட்டம் நேற்றைய தினம் யாழ். செயலகத்தில் அரச அதிபர் கே. சண்முகநாதன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலர்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தலைவர்கள், கூட்டுறவு ஆணையாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

- ப. நோ. கூ. சங்கங்கள் மூலம் பங்கீட்டு அட்டைக்கு பொதுமக்களுக்கு எரிபொருளை விநியோகித்தல்.
- விவசாயிகளுக்கு மேலதிகமாக 4 லீற்றர் மண்ணெண்ணெய் விநியோகிப்பது.
- ஒவ்வொரு குடும்பத்திற்கும் மாதத்தின் முதற்கிழமையும், மூன்றாம் கிழமையும் பங்கீட்டு அட்டைக்கு எரிபொருள் விநியோகிப்பது,

அத்துடன் எவ்வளவு எரிபொருளை விநியோகிப்பது போன்ற இன்னோரன்னவிடயங்களைத் தீர்மானிப்பதற்கு 4பேர்கொண்ட குழு ஒன்றும் அமைக்கப்பட்டது.

கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சி. வி. கே. சிவஞானம், வட பிராந்திய பெற்றோலியக் கூட்டுத்தாபன பிரதிமுகாமையாளர் எஸ். அன்ரன், கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் எஸ்.கணேசமூர்த்தி, எஸ் கனகசபாபதி ஆகியோரும் இக்குழுவில் அங்கம்வகிக்கின்றனர்.

இதேவேளை பெற்றோலியக்கூட்டுத்தாபனம் தேவையான அளவு எரிபொருளை ப. நோ. கூ சங்கத்திற்கு விநியோகிக்கும் பட்சத்தில்,

ப. நோ. கூ. சங்கக் கிளைகளில் காலை 6 மணிமுதல் மாலை 7 மணிவரை எரிபொருள் விநியோகிப்பதன் மூலம் எரிபொருட் தட்டுப்பாட்டை போக்குவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இது இவ்வாறிருக்க எரிபொருள் விநியோகத்தை கிராமசேவையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மூலமாக கண்காணிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது. (உ-77)

# மட்டக்களப்பில் கட்டுப்பாடுகள் தளர்வு

(மட்டக்களப்பு)

இராணுவக்கட்டுப்பாடற்ற மட்டக்களப்புப் பகுதிகளுக்கு இரவு 10.00 மணி வரைசெல்வதற்கு நேற்றுமுதல்அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரையே நுழைவாயிலூடாக பொது மக்கள செல்வதற்கு அனுமதிக்கப்பட்டு வந்தது.

பட்டிருப்பு, வலையிறவு, செங்கலடி காரத்தபாலம், கிரான் பாலம், மாங்கேணி ஆகிய சோதனைச் சாவடிகளுக்கூடாக பொது மக்கள செல்வதற்கு நேற்று முதல் விசேட நடைமுறைகள் பின்பற்றப்பட்வுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட சிவில் இணைப்பதிகாரி கேணல் குணசேகரா தெரிவித்துள்ளார்.

இதேவேளை மட்டக்களப்பு வாவியில் காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை கடற்தொழிலில் ஈடுபடவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளதும் அத்துடன் லொறிகள், உழவு இயந்திரங்கள சென்றுவர அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன் இரவு பகல் பஸ் சேவைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-5)

# பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையை பழைய இடத்தில் இயக்குக

## அமைச்சரிடம் கோரிக்கை

# தென்மராட்சியில் மிதிவெடிகளை அகற்ற நடவடிக்கை எடுங்கள்

## அன்ரன் பொன்னையா - ஜயலத்திடம் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

நெல் விளையும் பூமியான தென்மராட்சியில் இன்று மிதிவெடிகள் பொறிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளது. அவற்றை அகற்றுவதற்கு விரைந்து நடவடிக்கை மேற்கொளளுங்கள் என்று சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் அன்ரன் பொன்னையா யாழ் வந்த புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனாவிடம் வேண்டுகோள் விடுத்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அமைச்சர் ஜயலத் தலைமையில் யாழ் செயலகத்தில் அபிவிருத்தி தொடர்பான மாநாடொன்று இடம் பெற்றது. அம்மாநாட்டில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அன்ரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்; தென்மராட்சிப் பகுதியில் மக்களை மீளக் குடியமர்த்துவதற்கு முன்னர் அப்பிரதேசத்தை அச்சமற்ற ஒரு சூழலாக மாற்றவேண்டும் அங்கு விதைக்கப்பட்டிருக்கும் மிதிவெடிகள் பொறிவெடிகள்என்பவற்றை அகற்றி மின்சாரவசதிகளை ஏற்படுத்தி குடிநீர் வசதிகளை செப்பனிடவேண்டும் வைத்தியசாலைகளை சீரமைந்து அவற்றை இயங்கக் கூடிய சூழலை உருவாக்க வேண்டும். அதன் பின்னரே மக்களை மீளக் குடியமர்த்தும் நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

பாதை திறப்பதனால் மாத்திரம் தமிழ் மக்களுடைய பிரச்சினை தீர்ந்து விடப் போவதில்லை. அதற்கு மேலாக நிரந்தர சமாதானம் ஒன்றை ஏற்படுத்துவதே முதன்மையான பணியாக அமைய வேண்டும் என்று கூறினார்.

இதேவேளை மேற்படி பிரச்சினைகளைத் தான் கவனத்தில் எடுப்பதாகவும் அவற்றை ஏற்படுத்த பாடுபடுவதாகவும் அமைச்சர் ஜயலத் உறுதியளித்துள்ளார். (இ)

## யாழ்.பல்கலைக்கழக சமூகத்தின்

# பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வு புத்தூக்கத்தை ஏற்படுத்தியுள்ளது

## வாழ்த்து செய்தியில்சுரேஷ்பிரேமச்சந்திரன்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகம் கடந்த ஆண்டு நடத்திய பொங்கு தமிழ் நிகழ்ச்சி இலங்கையில் மாத்திரமல்ல உலகெங்கும் உள்ள ஈழத் தமிழர் மத்தியில் மீண்டுமோர் உத்வேகத்தை ஏற்படுத்தியது. தமிழ்மக்களின் தேசிய இனப்பிரச்சினையில் யாழ் பல்கலைக் கழகத்தின் பங்களிப்பு காத்திரமானதும் கணிசமானதும் என்பதை யாரும் மறுக்க முடியாது. அந்த வகையில் பொங்கு தமிழ் நிகழ்ச்சியும். இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் கூனிக்குறுகிப் போயிருந்த தமிழ் மக்களுக்கு, போராட்டம் தொடர்பாகவும்,தேசிய இன விடுதலை சம்பந்தமாகவும் புத்தூக்கத்தையும் புத்தெழுச்சியையும் கொடுத்துள்ளது.

இவ்வாறு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் பொங்கு தமிழ் நிகழ்வின் முதலாவது ஆண்டு நிறைவையொட்டி விடுத்த வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவ்வாழ்த்துச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,



பொங்குதமிழ் எழுச்சி விழாவின் முதலாவது ஆண்டு நிறைவைப் பல்கலைக் கழக மாணவர்கள் கொண்டாடுவது மிகவும் வரவேற்கக் கூடியதாகும். சமாதானத்தையும் அமைதியான வாழ்க்கையையும் மக்கள் ஏக்கத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். விடுதலைப் புலிகளும் சிறிலங்கா அரசாங்கமும் இனப்பிரச்சினைக்கான தீர்வை நோக்கி பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்திருக்கும் சூழ்நிலையில்பொங்கு தமிழ் போன்ற நிகழ்வுகளினூடாக எமது கோரிக்கைகளை வலியுறுத்துவதுடன் அது தொடர்பான பேச்சுவார்த்தைகளுக்கு பக்கபலமாக அமையும்.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை, வடக்கு கிழக்கு இணைப்பு போன்றவிடயங்களை சிங்கள அரசாங்கங்கள் அங்கீகரிக்க வேண்டுமா

### விலையேற்றத்தை

சகல பாடசாலைச் சமூகம், பல்கலைக்கழகசமூகம், அரசசார்பற்ற நிறுவனங்கள்,தொழிற்சங்க அமைப்புக்கள், பொது அமைப்புக்கள் வர்த்தக சமூகம், சமயம் சார்ந்த

# இராசி பலன்

16-01-2002
(தை-3, புதன்)
திருதியை ந.இ 12.42 வரை
அவிட்டம் மு.இ 8.06 வரை
ராகுகாலம்-12.34-2.04
சுபநேரம்-5.04-6.34

### மேடம்

நினைத்தகாரியம்கைகூடும், செல்வாக்கு, குடும்ப சுகம், பொருள் சேர்க்கை.

### இடபம்

தொழில் சிறப்பு, புதிய திருப்பம், தர்மம், காரியம் ஜெயம்.

### மிதுனம்

கட்டுப்பாடு, புதியதொழில் சிந்தை, அதிகாரிகள் மனஸ்தாபம், முயற்சி தாமதம்.

### கடகம்

எதிர்பாராத அச்சம், வியாதி, பிரயாண பயம், காரியதாமதம்.

### சிங்கம்

(யாழ்ப்பாணம்)

பலாலி ஆசிரியர் கலாசாலைப் புனரமைப்பு தொடர்பாக கடந்த 13 ஆம் திகதி யாழ். வந்த புனர்வாழ்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனாவிடம் மகஜர் ஒன்றை அதிபர் கு. சதாசிவமூர்த்தி கையளித்துள்ளார்,

அதில் குறிப்பிட்டுள்ளவாறு கடந்த 1986 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை 16வருடங்களாக பலாலி ஆசிரியர்கலாசாலை திருநெல்வேலி முத்துதம்பி மகா வித்தியாலயத்திலேயே இயங்கி வருகிறது. இதுபலாலியில் 54ஏக்கர் நிலப்பரப்பில் சகலவசதிகளுடனும் இயங்கி வந்தது.

இன்று அடிப்படை வசதிகளின்றி பெரும் கஷ்டத்தின் மத்தியில்இயங்கிவருகின்றது.

இவற்றைக் கருத்திற் கொண்டு பழைய இடத்தில் கலாசாலையை இயங்க வைக்க வேண்டும் இல்லாவிட்டில் இதற்கான ஒரு புதிய காணியைப் பெற்று கட்டிட வசதிகளைச் செய்து தர வேண்டும் என்று அம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(உ-9)

## வெதுப்பக உரிமையாளர் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபைக்குட்பட்ட வெதுப்பக உரிமையாளர்களுக்கானகலந்துரையாடலொன்று இன்று பிற்பகல் 2.30 மணிக்கு, இல-107, கண்டிவீதி, சுண்டுக்குளியில் அமைந்துள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெறுமென சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

இக்கலந்துரையாடலில் வெதுப்பக உரிமையாளர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

(இ)

## சிங்கள ஓவியர் யாழ்.வருகை

(யாழ்ப்பாணம்)

பிரபல சிங்கள இளம் ஓவியக்கலைஞர் குசல் நந்தன யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளார்.

திருமறைக் கலாமன்றத்தின் அழைப்பின் பேரில் வருகை தந்துள்ள இவர், கலாமன்றத்தில் ஓவியப்பட்டறை ஒன்றை எதிர்வரும் 17 ஆம் 18 ஆம் 19 ஆம் திகதிகளில் நடாத்தவுள்ளார்.

(இ)

**சிங்கம்**

காரிய அனுகூலம், அபூர்வ சந்திப்பு, கலந்துரையாடல், திடீர் பயணம்.

**கன்னி**

தனவரவு, செய்தொழில் விருத்தி, முயற்சி கைகூடும், நோய் குணமடைதல்.

**துலாம்**

உடல்நலக்குறைவு, தாழ்ந்த சுபாவம், பிரயாணதாமதம், திடீர் நன்மை.

**விருச்சிகம்**

பயந்த சுபாவம், வேண்டாத உறவு, சகோதரர் உறவு, அதிகாரம்.

**தனுசு**

நல்ல முயற்சி, பிரயாண நன்மை, அந்நியர் சந்திப்பு, வாக்குப்பலிதம்.

**மகரம்**

கௌரவக் குறைவு, முயற்சி தாமதம், வாக்குபகை, வீண் செலவு.

**கும்பம்**

சயன சுகம், உடல் நலம், சுகலாபம், கௌரவம்.

**மீனம்**

காரிய அலைச்சல், சுப செலவு, உணர்ச்சி வசப்படல், தொழில் நன்மை.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

அமைப்புக்கள், மற்றும்பொது மக்கள் அனைவரையும்பூரண ஆதரவினை வழங்கி ஒத்துழைப்பு தருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தொடர்ந்துகொண்டிருந்த யுத்தத்தினால் மிகவும் பாதிப்புக்குள்ளாகியிருந்த மக்கள் அண்மையில் விடுதலைப்புலிகளாலும், அரசினாலும் கடைப்பிடிக்கப்பட்டுவரும் யுத்த நிறுத்தத்தினாலும், பேச்சுவார்த்தைக்குரிய ஏற்பாட்டு முயற்சிகளினாலும், ஒரு அரசியல் தீர்வு கிட்டி சமாதானம் கிடைக்குமென ஓரளவு மனநிம்மதியுடன் உள்ளனர்.

இந்நிலையில் அத்தியாவசியப் பொருட்களின் பதுக்கல், விலையேற்றம் என்பன அவர்களுக்கு அவநம்பிக்கையையும் மேலதிக பொருளாதாரச் சுமையையும் ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது.

இதனை தொடரவிடாது கட்டுப்படுத்தி மக்களின் அன்றாடத் தேவைகளுக்கான அத்தியாவசியப் பொருட்கள் கட்டுப்பாட்டு விலையில் எதுவித தட்டுப்பாடுகளின்றி கிடைப்பதற்கு சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளது.

(ந)

கள் அங்கீகரிக்க வேண்டுமாயின், பரந்துபட்ட மக்கள் எழுச்சியும், ஆதரவும் முக்கியமானதாகும். தமிழர் கூட்டமைப்பும், பல்கலைக்கழக மாணவர்களும், விவசாயிகளும், மீனவர்களும் இன்னும் வடகிழக்கில் இருக்கக்கூடியசகல தொழிற்சங்கங்களும் இணைந்து, இவ்வாறான மக்கள் எழுச்சிகளை உருவாக்க வேண்டும். இதற்கு யாழ் பல்கலைக்கழக மாணவர்களின் பொங்குதமிழ் நிகழ்வு நல்லதொரு முன்மாதிரியாகும். சாதி, மத குல பிரதேச வேறுபாடில்லாமல் தமிழரெல்லோரும் ஒன்றுபடுவோம். சுயநிர்ணய உரிமையை வென்றெடுப்போம். என்பது பொங்கு தமிழின் தொனிப்பொருளாக இருக்கட்டும் என வாழ்த்துகின்றோம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## விடுதலைப் புலிகள் இறைமைக்கும் பங்கம் ஏற்படும் சாத்தியக்கூறுகள்உண்டு.

எனது முன்னைய ஆட்சியில் விடுதலைப்புலிகளின் செயற்பாடு முற்றாக ஒடுக்கப்பட்டது. இதனை மீண்டும் தளர்த்தினால் அது தமிழகத்தில் பலதுன்பங்களுக்கு வழிவகுக்கும் என்றும்செல்வி ஜெயலலிதா தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (இ4)

## மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க
# முக்கிய அமைச்சர்கள் அடங்கிய குழு விரைவில் யாழ்.வரும்?

(கொழும்பு)

யாழ்.குடாநாட்டுமக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் வகையில் முக்கிய அமைச்சர்கள் அடங்கிய குழு ஒன்று இம்மாத இறுதிக் குள யாழ்.வரவிருப்பதாக தகவல் அறிந்த வட்டாரங்களில் இருந்து தெரிய வந்துள்ளது.

இருநாள விஜயமாக யாழ். வந்திருந்த புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனாவுடன் வந்த பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவின் செயலாளர் சமன அத்தாவுட ஹெட்டி, இங்குநேரில் கண்டவை மற்றும் பொதுமக்களுடன் கலந்துரையாடிப் பெற்ற விடயங்கள் அடங்கிய அறிக்கை ஒன்றினை இன்றுஅல்லது நாளை பிரதமரிடம் கையளிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவ் அறிக்கையின் அடிப்படையிலேயே யாழ். குடாநாட்டு மக்களின் பிரச்சினைகளை நேரில் தீர்க்கும் வகையில் முக்கிய அமைச்சர்கள் அடங்கிய குழுவினர் யாழ். குடாநாட்டுக்கு அனுப்பிவைக்கப்பட விருப்பதாக தெரிய வந்துள்ளது. (உ)

## கலந்துரையாடலும் பொதுக்கூட்டமும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை மு.ப.9.00 மணிக்கும், உறுப்பினர்களுக்கான பொதுக் கூட்டம் மு.ப.10.00 மணிக்கும் ஆரியகுளத்திற்கு முன் உள்ள புதிய உயர் கலைக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

இதில் ஆசிரியர் நியமனம் சம்பந்தமான விடயம் ஆராயப்படவுள்ளதால் சம்பந்தப்பட்ட அனைவரையும் குறித்த நேரத்திற்கு தவறாது சமுகம் தருமாறு மேற்படி சங்கத்தலைவர் வே.மணிமாறன் அறிவித்துள்ளார். (செ)

## மலசல கூடத்தில் இருந்து துர்நாற்றம்

(யாழ்ப்பாணம்)

திருநெல் வேலிப் பொதுச் சந்தையில் காணப்படும் மலசல கூடம் நீண்டகாலமாக துப்பரவுசெய்யப்படாமல்துர்நாற்றம் வீசிவருகின்றது.

இதனால் திருநெல்வேலிப் பொதுச்சந்தைக்குச்செல்லும் பொது மக்கள் பெரும்அசௌகரியங்களை அனுபவித்துவருகின்றனர்.

இது குறித்து சம்பந்தப் பட்டவர்களின் கவனத்தின் கீழ் கொண்டுவரப்பட்டும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ-19)

## பிளாஸ்ரிக் அறுவைச் சிகிச்சை யாழிலும் செய்யலாம்

(யாழ்ப்பாணம்)

உதடு, மூக்கு சத்திர சிகிச்சை, தீக்காயங்கள், விபத்துக்கள் போன்றவற்றால் தழும்புகள், அடையாளங்கள் ஏற்பட்டவர்கள் உட்பட பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சைக்கு உட்பட விரும்புவர் தமது விபரங்களை யாழ். போதனாவைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் பதிவு செய்யும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

பிளாஸ்ரிக் அறுவைச்சிகிச்சையில் நிபுணத்துவம் வாய்ந்த பிரிட்டனைச்சேர்ந்த எட்டு வைத்திய நிபுணர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் பெப்ரவரி 3 ஆம் திகதி முத அறுவைச் சிகிச்சைப்பணியில் ஈடுபடவுள்ளதனாலேயே மேற்கண்ட அறிவிப்பு வெளியிடப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## மரக் கன்றுகள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

பொங்குதமிழ் நிகழ்வை முன்னிட்டு, மர நடுகைத் திட்டத்தின் கீழ் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் இன்று பிற்பகல் பொது இடங்கள மற்றும் யாழ். பல்கலைக்கழக முன்றல் ஆகியவற்றில் வைத்து, பொங்கு தமிழ் நிகழ்வன்று நாட்டும் பொருட்டு பயன்தரு மரக் கன்றுகள் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளன. (உ)

## நஷ்ட ஈடு தொடர்பான பொலிஸ் அறிக்கையை பெறுமாறு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி, கைதடிப் பகுதி மக்களைத் தமது நஷ்ட ஈடு தொடர்பான பொலிஸ் அறிக்கையினை வந்து பெற்றுக் கொள்ளுமாறு கோப்பாய் பொலிஸ் விசாரணைப் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட யுத்த அனர்த்தங்கள் காரணமாக தமது உடைமைகள் மற்றும் வீடுகள் சேதமடைந்தமை தொடர்பாக மேற்படி பொலிஸ் நிலையத்தில் பதிவுகளை மேற்கொண்ட பலர் அது தொடர்பான பொலிஸ் பதிவு அறிக்கையை இதுவரை பெற்றுக் கொள்ளவில்லை எனவும்,

அவ்வாறு பெறாதவர்களை உடன் வந்து பெற்றுக்கொள்ளுமாறும், தமது இழப்பீடு தொடர்பான பதிவுகளை மேற்கொள்ளத்தவறியவர்கள் பதிவுகளைப் பதிந்து தமது இழப்பினை உறுதிப்படுத்துமாறும் பொலிஸ்பொறுப் பதிகாரிமேலும் தெரிவித்துள்ளார். (உ-9)

## 60 ஆயிரம் மக்கள் வாக்களிக்காமைக்கு முன்னைய அரசே காரணம்
### ஐ. தே. க. பொதுச் செயலர்

(கொழும்பு)

கடந்த கால ஆட்சியாளர்களின் சதி நடவடிக்கையே, மட்டக்களப்பு மாவட்டத்தில் 60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் நடந்து முடிந்த தேர்தலில் வாக்களிக்கமுடியாமல் போனமைக்குகாரணமாகும்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் செனாத் கப்புகொட்டுவ தெரிவித்துள்ளார்.

வாக்களிப்பதற்குமக்கள்தடுக்கப்பட்டமை தொடர்பான அப்படை மனித உரிமைமீறல் மனுக்கள் பல, உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்த மனுக்கள் மீதான விசாரணையின் முடிவில் நீதியானதொரு முடிவு கிடைக்குமெனதான் நம்புவதாகவும் அவர் மேலும்தெரிவித்துள்ளார். (உ-5)

## விழிப்புணர்வு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

மகளிர் அபிவிருத்தி நிலையமும், வாலிப கிறிஸ்தவ சங்கமும் (வை.எம்.சீ.ஏ) இணைந்துநடத்தும் மனித உரிமைகள தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு இன்று பி.ப.2.00மணிக்கு மகளிர் திறன் வளர்நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

இக் கருத்தரங்கில் சட்டதரணிகள் திருமதி.பவானி சற்குணராசா வீ.ரி.சிவலிங்கம் மகளிர் அபிவிருத்தி பணிப்பாளர்திருமதிசரோஜா சிவச்சந்திரன் ஆகியோர்கருத்துரைகளை வழங்கவுள்ளனர். (உ)

### ஐ.தே.க. முன்னெடுத்துள்ள இனப்பிரச்சினைக்கான
# தீர்வுப்பாதை கடினமானதாயினும் அரசு தன்முயற்சியில் பின்வாங்காது
### அமைச்சர் மெலிந்த மொறக்கொட தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

நாட்டில் பல வருடங்களாக இருந்துவரும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக தற்போதைய ஆட்சியில் இருக்கும் ஐ.தே. முன்னணி அரசு உறுதியாக உள்ளது.

இனப்பிரச்சினை தொடர்பான பிரச்சினைக்கு தீர்வு காணும் பாதை கடினமானதாகஇருந்தாலும்அதிலிருந்து ஒருபோதும் அது தவறமாட்டாது என பொருளாதார சீர்திருத்ததொழில்நுட்பவிஞ்ஞான அமைச்சர் மெலிந்த மொறக்கொட தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை மட்டக்களப்பிற்கு திடீர்விஜயம் ஒன்றை மேற் கொண்டு இராணுவ தலைமையகத்தில் நடைபெற்ற உயர் மட்ட மாநாட்டில் அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர்தொடர்ந்து தெரிவிக்கையில்; மட்டக்களப்புமாவட்டத்தில் நீண்ட காலமாக இருந்துவரும் பாதுகாப்புக் கெடுபிடிகள் நீக்கல், மக்கள் சிரமமின்றி போக்குவரத்து செய்தல், பொது மக்களின் நலன் கருதி தேவையான பொருட்களை எடுத்துவருதல் போன்றனதொடர்பாக ஆராயப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

ஐ.தே. முன்னணியின்ஒரே நோக்கம் மனிதாபிமான உதவிகள் மூலம்மக்களின்உள்ளங்களை வென்றெடுப்பதுதான்.

இவ்வாறான செயல்பாடுகளினால் குடியானவனுக்கும் முடியானவனுக்கும் இடையேயுள்ள ஒற்றுமையுணர்வுகளையும் பரஸ்பர நம்பிக்கையினையும்வலுப்படுத்த முடியும்என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-8)

## முத்திரை அச்சடித்த தபாலுறைக்குத் தட்டுப்பாடு

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணத்தில் முத்திரை அச்சடிக்கப்பட்ட தபாலுறைக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது.

இது குறித்து யாழ். பிரதம தபாலகத்தின் பிரதி தபாலதிபரை வினவிய போது, தமக்கு தலைமையகத்திலிருந்து டிசெம்பர் மாதத்தின் பின்னர் முத்திரை அச்சடிக்கப்பட்ட தபாலுறைகள் அனுப்பிவைக்கப்படவில்லை என்றும், இது குறித்து தலைமையகத்திற்கு சுட்டிக் காட்டியிருப்பதாகவும் தெரிவித்துள்ளார். (செ-59)

### உள்ளூராட்சித் தேர்தல்
## வாக்காளர் பெயர்ப் பட்டியல் பார்வைக்கு

(கொழும்பு)

உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடும் வாக்காளர்களின் பெயர்ப்பட்டியல்கள் சகல மாவட்டங்களினதும் மாவட்டச் செயலகங்களில் நேற்று முதல் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

நாட்டிலுள்ள 18 மநாகர சபைகள், 37 நகரசபைகள், 256 பிரதேச சபைகளில்நடைபெறவுள்ள இத்தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு விண்ணப்பங்கள் விரைவில் கோரப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ.8)

## போலிப் பணத்துடன் வெளிநாட்டவர்கள் கைது

(கொழும்பு)

கல்கிசைப்பகுதியில் போலி நாணயத்தாள்களுடன் இரண்டு வெளிநாட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி டபிள்யூ.பீ தயாரத்ன தெரிவித்துள்ளார்.

இவ்விருவரையும் தடுப்புக் காவலில் வைத்து விசாரித்து வரும் அதிகாரிகள், விசாரணைகள் முடிவுறும் வரை கைப்பற்றப்பட்ட நாணயத்தாள்களின்பெறுமதிகள்வெளியிடப்பட மாட்டாது எனவும் தெரிவித்துள்ளனர். (உ-8)

### இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்
# தமிழர் வாழும் மாவட்டங்களில் பொங்கல் விழாவுக்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

இந்துசமய கலாசார அலுவல்கள திணைக்களத்தின் பொங்கல் விழா தமிழ்மக்கள் செறிந்து வாழும் மாவட்டங்களில் கொண்டாடப்படவுள்ளது.

இதன்படி எதிர்வரும் 19 ஆம் திகதி இரத்தினபுரியிலும், 20 ஆம் திகதி முல்லைத்தீவிலும், 25 ஆம் திகதி புத்தளத்திலும் 26 ஆம் திகதி மட்டக்களப்பிலும் இந் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் தெரிவித்தார்.

தமிழர் கலாசார நிகழ்வுகளுக்கு அரச ஊடகங்களில் அதிக முக்கியத்துவம் கொடுத்து அதன்மூலம் இன நல்லுறவை ஏற்படுத்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு முழு நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பொங்கல்தின நிகழ்வுகள் ரூபவாஹினி மூலம் நேரடியாக ஒளிபரப்புச் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-106)

## வறிய விவசாயிகளின் விபரங்கள் சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

கேந்திர நிலைய பெரும்பாக உத்தியோகத்தரின் பணிப்பிற்கமைய உடுவில் கமநல கேந்திர நிலையப் பிரிவிலுள்ள விவசாயிகள் சம்மேளனங்களினூடாக அப்பகுதியில் உள்ள வறுமை நிலையில் வசிக்கும் விவசாயிகளின் விபரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

750நபாவுத்த தரைந்நாத வருமானமுடைய வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ளவிவசாயக்குடும்பங்கள் இவ்விபரத் திரட்டலில் அடங்குகின்றது.

இவர்களது பெயர், முகவரி, தேசிய அ.அ.இலக்கம் ஆகிய விபரங்களைச் சேகரித்து அனுப்புமாறு கேந்திர நிலையப் பெரும்பாக உத்தியோகத்தர் கடிதமூலம் பணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

## இன்று ஒரு தகவல்

# ஆபத்தில் உதவுவதே நட்பு

ஒரு ஆள் தனியாக வந்து கொண்டிருந்தான். வழியில் ஒருகாடு. அதைத்தாண்டி அந்தப்பக்கம் போயாக வேண்டும். அங்கேதான் அவனின்ஊர் இருக்கிறது. இருண்டுபோனது. அந்தக் காட்டில் மிருகங்கள் அதிகம். ஆதலால் தனியாகப் போவதற்கு இவனுக்குப் பயம். என்னசெய்யலாம் என்று யோசித்துக்கொண்டே ஒரு மரத்தடியில் உட்கார்ந்தான். கொஞ்சநேரத்தில் இன்னொருவனும் தனியாகவந்து கொண்டிருந்தான். நல்லவேளை ஒருதுணை கிடைத்ததுஎன்று நினைத்தான் இவன். என்ன நீயும் இந்தக் காட்டுவழியாக அடுத்தபக்கம் போகவேண்டுமா? என்று கேட்டான். அவன் ஆமாம் என்றான்.

'அப்படியென்றால் இந்த நிமிஷத்திலிருந்து நாமிருவரும் நண்பர்கள். ஒருவருக்கொருவர் துணையாக இந்தக் காட்டுவழியே போவோம். எனக்கு ஆபத்துவந்தால் நீ துணை! உனக்கு ஆபத்து வந்தால் நான்துணை! ஆபத்து வந்தால் ஒருவருக்கொருவர் உதவிசெய்து கொள்ளவேண்டும்' என்று ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டார்கள். பின்னர் அவர்களிருவரும் புறப்பட்டுக் காட்டுவழியாகப் போனார்கள். கொஞ்சத்தூரம் போனதும் ஒருபெரிய கரடி அவர்களுக்கு எதிரில் வந்துகொண்டிருக்கிறது. அதைப் பார்த்தார்கள். அவ்வளவுதான். ஒருவன் கொடுத்த வாக்குறுதியை மறந்தான். செய்துகொண்ட ஒப்பந்தத்தை மறந்தான். கிடுகிடென்று ஒருமரத்திலேறி உட்கார்ந்து கொண்டான். இன்னொருவனுக்கு மரம் ஏறத் தெரியாது! தனிஆளாகக் கரடியைச் சமாளிப்பதும் சாத்தியமில்லாத விஷயம்.

என்னசெய்யலாம் என்று யோசித்தான். அப்படியே தரையில் படுத்துவிட்டான். மூச்சை அடக்கிவிட்டான். செத்துப்போனவன் மாதிரிக் கிடந்துவிட்டான். அந்தக் கரடி பக்கத்தில் வந்து முகர்ந்து பார்த்தது. ஆள் செத்துவிட்டான் என்று நினைத்து அப்பால் போய்விட்டது. கரடிபோன பின்னர் மரத்திலிருந்தவன் மெதுவாக இறங்கி வந்தான். கீழே படுத்திருந்தவனைப் பார்த்தான். ''அது சரி... உன்னிடம்அந்தக்கரடிகாதுஓரமாகஏதோபேசியதே.. என்ன சொன்னதுஎன்று கேட்டான். அதற்குப் படுத்திருந்தவன் 'ஆபத்துக்குதவாத உன்மாதிரி நண்பர்களை நம்பாதே' என்று சொல்லியதுஎன்றான். இப்படி ஒரு கதை உண்டு.

இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ளவேண்டியது என்னவென்றால், நட்பு என்றால் ஒருவருக்கொருவர் உதவியாக இருக்கவேண்டும் அதுதான் நட்பு, ஆபத்துச் சமயத்தில் அப்புறமாவது நட்பு அல்ல. அது எப்படி சார்? இரண்டு பேர் உயிருக்கும் ஆபத்து என்று வரும்போது, தப்பிக் கொள்வது எப்படியென்று தானே பார்க்க முடியும் என்று நீங்கள் நினைக்கலாம். அதுவும் நியாயம் தான். இருந்தாலும் இரண்டுபேரும் சேர்ந்து ஒரு சங்கடத்தைச் சுலபமாகச் சமாளிக்க முடியுமென்றால் அந்த நேரத்தில் கூட துணையாக இருக்கிறதை விட்டு விட்டு தூர ஓடிப்போய் விட்டால் அது நன்றாயிருக்குமா? சிலர் மிகவும் சாமர்த்தியமாக நடந்து கொண்டு கூட நண்பர்களைக் காப்பாற்றுவது உண்டு.

அதற்கு ஒரு கதை சொல்கிறேன் கேளுங்கள். இரண்டு நண்பர்கள் இருந்தார்கள். இருவரும் ஆளுக்கொரு துப்பாக்கி வைத்திருந்தார்கள். அதனுடன் காட்டுக்கு வேட்டையாடப் போனார்கள். ஏதாவது கண்ணில் படுகிறதாவென்று அந்தக் காட்டில் தேடிக் கொண்டிருந்தார்கள், அந்தச்சமயம்பார்த்துக் காட்டிலாகா அதிகாரிகள் ஜீப்பிலே அந்தப்பக்கம் வந்துவிட்டார்கள். அவ்வளவுதான். அதைப் பார்த்ததும் இந்த இரண்டு பேரில் ஒருவன் வேகமாக ஓட ஆரம்பித்துவிட்டான். இன்னொருவன்ஒன்றும் புரியாமல் அதேயிடத்தில் நின்றுவிட்டான் அந்த அதிகாரிகள் ஓடுகிறவனைத் துரத்த ஆரம்பித்தார்கள். அவன் செடிகொடிகளுக்கு மத்தியில் நுளைந்து வளைந்து ஓடினான். இவர்களும் விடவில்லை, வெகுதூரம் போய் ஓரிடத்தில் அவனைப்பிடித்தார்கள். அதிகாரி கேபமாக அவனைப் பார்த்தார். ஏன் இப்படி பயந்து கொண்டு ஓடிவந்தாய் எடு லைசென்ஸை. என்றார் அவன் மெதுவாக தன் பாக்கெட்டில் கையை விட்டு லைசென்ஸை எடுத்துக் காட்டினான். அதிகாரி அதை வாங்கிப்பார்த்தார். எல்லாம் சரியாக இருந்தது. உன்னிடம் தான் லைசென்ஸ் இருக்கிறதே- எதற்காக இப்படி ஓடிவந்தாய்? என்று கேட்டார். என்னோடு அங்கு வந்திருந்த எனது நண்பனிடம் லைசென்ஸ் இல்லையே! என்றான். அவனிடம் இல்லையென்றால் உனக்கென்ன? நீஏன் ஓடவேண்டும் என்று கேட்டார் 'அவனை உங்களிடமிருந்து தப்பவைப்பதற்காகத் தான் நான் இப்படி இவ்வளவு தூரம் ஓடிவந்தேன்' என்றான்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# தென்னிந்தியாவில் பேச்சு நடத்த மத்திய அரசு அனுமதிக்க வேண்டும்

### காணாமல்போன படையினர் சங்கம் கோரிக்கை

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே, சமாதானப் பேச்சுக்கள் தென்னிந்தியநகரில் நடைபெற இந்திய மத்திய அரசு அனுமதி வழங்கவேண்டுமென்று காணாமல்போன படையினர்சங்கம்இந்திய மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கையில் சமாதானம் மலர்வதற்கு அடிப்படையாக அரசும்புலிகளும்தென்னிந்திய நகரில் பேச்சில் ஈடுபடவிருப்பம் கொண்டுள்ளனர். இந்நிலையில் இருதரப்பும் அங்கு பேச்சில் ஈடுபட இந்திய மத்திய அரசு அனுமதிக்க வேண்டுமென்று, சங்கத்தின் தலைவர் ஈ. பி. நாணயக்கார இந்திய மத்திய அரசுக்கு அனுப்பிய கடிதத்தில்வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ)

## காங்கேசன் விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரி என். ஜீவேஸ்வராஇன்றுகாங்கேசன்துறை தடுப்பு முகாம் செல்லவுள்ளார்.

அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளிற்கு அவர்களின் உறவினர்களால் வழங்கப்படும் கடிதம்மற்றும்உடைகளை எடுத்துச் சென்று ஒப்படைப்பதுடன், கைதிகளினால் உறவினர்களிற்கு வழங்கப்படும் கடிதங்களையும் இவர் எடுத்துவருவார். (உ-9)

## பிரிவுபசார விழா

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக நூலகத்தில் இருபத்தைத்தாண்டுகளுக்கு மேலாக பணியாற்றிய மு. அருட்பிரகாசம் அவர்களின் பிரிவுபசார விழா இன்று பிற்பகல் 3.30 மணியளவில் நூலக கேட்போர் கூடத்தில் ஊழியர் சங்க ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் துணைவேந்தர் பதிவாளர் மற்றும் நூலகர்கள் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-4)

## வெடிகொளுத்தியதில் இருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

பொங்கல்தினமான திங்கள் வெடிகொளுத்தி மகிழ்ந்த மாணவர்கள் இருவர் அது வெடித்ததனால் காயமடைந்து யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் கொட்டடியைச்சேர்ந்த மரியதாசன் ஸ்ரீகரிகரன்(வயது15)கொக்குவிலைச் சேர்ந்த யோகேஸ்வரராசா இருதயராசா (வயது17)ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவர். (இ.104)

## பதவியேற்பு வைபவம்

(யாழ்ப்பாணம்)

பனை அபிவிருத்திச் சபையின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள பொ. சிவபாதம் தனது பதவியை உத்தியோகபூர்வமாக கடமையேற்கும் வைபவம் எதிர்வரும் 18ஆம்திகதிவெள்ளிக்கிழமை காலை கொழும்பு காலி வீதியில் அமைந்துள்ள பனை அபிவிருத்திச்சபை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் இந்து சமய விவகாரஅமைச்சர் தி. மகேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (உ)

## பாப்பரசரின் இலங்கை பிரதிநிதி யாழ்ப்பாணம் வருகை

(யாழ்ப்பாணம்)

பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பரின் இலங்கைக்கான பிரதிநிதி தோமஸ் ஜேச்சிங்றான் நாளை வியாழக்கிழமைஉத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

எதிர்வரும் சனிக்கிழமை மாலை பருத்தித்துறைமறைக் கோட்டத்திற்கு விஜயம் செய்து தென்மராட்சியில் இருந்து இடம்பெயர்ந்துவசிக்கும் மக்களை இவர் பார்வையிட்டு உரையாடவும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (உ)

## யட்டிநுவரப் பகுதியில் குழுமோதல் ஒருவர் பலி

### 10 பேர் படுகாயம்

(கொழும்பு)

மாத்தளையட்டிநுவரப்பகுதியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் இரு குழுக்களிடையே ஏற்பட்ட மோதலில் ஒருவர் கொல்லப்பட்டதுடன்மேலும் பத்துபேர் காயமடைந்துள்ளனர்.

விளையாட்டுக் கழகங்களுக்கிடையே ஏற்பட்ட பிணக்கு மோதலாக வெடித்ததில் இச்சம்பவம் ஏற்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில்காயமடைந்தோரில் நால்வரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக மாத்தளை வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

காயமடைந்தவர்கள் மாத்தளை வைத்தியசாலையிலிருந்து ரத்தோட்டை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து அப்பகுதியில் பதற்றம் நிலவுவதால் நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக பொலிஸார் அவ்விடங்களில் நிறுத்தப்பட்டுள்ளதாக ரத்தோட்டை பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (உ-4)

## தென்மராட்சியில்மிதிவெடி விழிப்புணர்வு தட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யுனிசெவ் உதவித் திட்டத்தின் அனுசரணையுடன் பொது மக்கள் அதிகமாகக் கூடும் தென்மராட்சியின் பல்வேறு இடங்களிலும்மிதிவெடி மற்றும் வெடிப்பொருட்கள் தொடர்பானவிழிப்புணர்வை ஏற்படுத்தும் பெரியளவிலான விளம்பரத் தட்டிகள் வைக்கப்பட்டுள்ளன.

இப்பகுதியில் அண்மைக் காலங்களில் அனேக பொது மக்கள் மீளக்குடியேறி வருவதனால் மிதிவெடி மற்றும் வெடிப்பொருட்களினால் பொது மக்களுக்கு ஏற்படும் ஆபத்தைத் தவிர்க்கும் வகையில் இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ)

## வவுனியாவில் பொங்கல் களியாட்ட நிகழ்வுகள்

(வவுனியா)

அரசின்மோதல் தவிர்ப்பும் விடுதலைப்புலிகளின் யுத்த நிறுத்தமும் அமுலில் இருப்பதை அடுத்து நீண்ட இடைவெளிக்குப்பின்இம்முறை வவுனியாவில் தைப்பொங்கல் நிகழ்ச்சியை முன்னிட்டு விழாக்கோலம் பூண்டு பல்வேறு நிகழ்ச்சிகள் இடம்பெற்றுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

தைப்பொங்கலை அடுத்து திங்கள் இரவு பல்வேறு களியாட்ட நிகழ்ச்சிகளும் மாயாஜால மந்திரவித்தை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றுள்ளதாகவும் இதில் பெருமளவு மக்கள் கலந்து கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா ரம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்தில் கடந்த ஒருவருடகாலமாக களியாட்ட நிகழ்வுகள் நடைபெற்றுவருவதாகவும் இதற்கு கொழும்பிலிருந்து மந்திரவாதிகளும் வவுனியா வந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

## கைதான கொழும்பு வர்த்தகர் விடுதலை

(கொழும்பு)

1999டிசம்பர் 18ஆம் திகதி கொழும்பு நகர மண்டபத்தில் நடைபெற்ற பொ.ஐ.மு. கூட்டத்தில்குண்டுவெடித்தது தொடர்பாக2000நவம்பர்11ஆம் திகதி சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ஞானசேகரம் என்னும் கொழும்பு வர்த்தகர் விடுவிக்கப்படவுள்ளார்.

இவரது அடிப்படையுரிமை மீறல்மனு கடந்த வெள்ளிக்கிழமை மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்ட போது, அரச சட்டத்தரணி இதனைத் தெரிவித்தார்.

ஞானசேகரத்தை ஜனவரி 18ஆம் திகதி கொழும்பு மஜிஸ்ரேட் முன்னிலையில் ஆஜராக்குமாறு சட்டமா அதிபர் பொறளை மகசீன் சிறைச்சாலை அத்தியட்சகரைப்பணித்துள்ளதாக அரச சட்டத்தரணி தெரிவித்தார். (உ)

## சிந்தனைக்கு விருந்து

### கல்நெஞ்சன் இராமன்

அந்நிய னின்சிறையில் அல்லற்பட் டாளைமிகக்
கன்னெஞ்ச ராமன் கலங்காதே - 'உன்னுடைய
கற்பைநீ தீக்குளித்துக் காட்டெ'ன்று வேண்டியது
பொற்புடைய பண்போ புகல்.

'பழையவன்'

### சதா அமைப்பின் தலைவர்

# இஸ்ரேல் வைத்த குண்டுக்கு பலி

# பழிக்கு பழி வாங்க பலஸ்தீனம் தயார்

(ஜெருசலம்)

மத்திய கிழக்கின் மேற்குக் கரை நகரான துல்காராமில் பலஸ்தீன தலைவர் ஜசீர் அரபாத்தினுடைய சதா அமைப்பின் தலைவர் குண்டு வெடிப்பொன்றில் கொல்லப்பட்டுள்ளார்.

இதனை அடுத்து, அந்த அமைப்புடன் தொடர்புடைய பலஸ்தீனத் தீவிரவாத அமைப்புக்கள் தாம் கடைப்பிடித்து வந்தபோர் நிறுத்தத்தைக் கைவிடுவதாக அறிவித்துள்ளனர்.

சதா அமைப்பின் தலைவர் கொல்லப்பட்டமைக்கு இஸ்ரேலிய இராணுவமே காரணமெனத் தெரிவித்திருப்பதுடன், யுத்தநிறுத்தத்தை விலக்கிக் கொண்டு இஸ்ரேல் மீது தாக்குதல் தொடுக்கப் போவதாக அறிவித்துள்ளனர்.

இதேவேளை, சதா அமைப்பின் தலைவர் பல பொதுமக்களின் படுகொலைக்கு க் காரணமானவரென்று இஸ்ரேல் ஏற்கனவே குற்றஞ்சாட்டியிருந்தது.

மேற்படி தலைவர் கொல்லப்பட்டமைக்கு பலஸ்தீன அதிகாரிகள் பலர் கண்டனம் தெரிவித்துள்ளதுடன், பலஸ்தீன தீவிரவாதிகள் யுத்த நிறுத்தத்தை மீறி இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தப் போவதாக அறிவித்திருப்பது பலஸ்தீன தலைவர் ஜசீர் அரபாத்துக்கு சங்கடமான நிலையை ஏற்படுத்தியுள்ளதாக ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

(உ-5)

### பலஸ்தீனரின் வீடுகள்

## அழித்தொழிக்கப்படாது இஸ்.வட்டாரங்கள் தெரிவிப்பு

(ஜெருசலம்)

பலஸ்தீனத்தின் ஜெருசலம் பகுதிகளில் உள்ள வீடுகள் இடித்து தரைமட்ட மாக்கப்படுவது நிறுத்தப் பட்டுள்ளதாக இஸ்ரேலின் வெளியுறவு அமைச்சர் சிமோன் பெரஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த சில வாரங்களாக இஸ்ரேலிய இராணுவத்தினரால் பலஸ்தீன வீடுகள் பல டாங்கிகளால் இடித்து தரை மட்டமாக்கப்பட்டு வந்தன.

நேற்று முன்தினம், வெளியுறவு அமைச்சர் சிமோன் பெரஸ் தலைமையில் நடைபெற்ற முக்கிய கூட்டமொன்றிலேயே இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-5)

### நைஜீரியா சென்ற

## சரக்கு விமானம் வீழ்ந்து நொருங்கியது

(ஹராரே)

சிம்பாபேயிலிருந்து நைஜீரியாவுக்குச் சென்ற சரக்கு விமானம் ஒன்று வீழ்ந்து நொருங்கியதில் அதன் விமானி உட்பட மூவர் பலியாகியுள்ளனர்.

விமானம் புறப்பட்டவேளை அடர்ந்த பனிப்புகை காணப்பட்டதாக கூறப்பட்டுள்ள போதிலும் விமான விபத்திற்கான காரணம் இன்னதென்று இன்னமும் கண்டறியப்படவில்லை. (து)

### ஆப்கானில் மீண்டும்

## அமெரிக்க விமானங்கள் அகோர குண்டு மழை

(காபூல்)

ஆப்கானிஸ்தானின் கிழக்குப் பகுதியில் அமெரிக்க விமானங்கள் மீண்டும் தொடர்ச்சியாக குண்டுத்தாக்குதல்களை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இக் குண்டு வீச்சினால் பொதுமக்கள் பலர் கொல்லப்பட்டும் அனேகர் வீடுகளை விட்டு வெளியேறியும் உள்ளனர்.

இந்தக் குண்டு வீச்சினால் 35 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள வீடுகளின் ஜன்னல்களும் கதவுகளும் அதிர்ந்தவண்ணம் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, விமானங்களின் குண்டு வீச்சுக்கள் மத்தியிலும் அமெரிக்க படையினர் அப்பகுதிகளில் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-5)

### எல்லைகளில் நிலை கொண்டுள்ள

## இந்தியப் படையினர்

### இந்திய சனத்தொகையைக்

## கட்டுப்படுத்த புது யுக்தி

(புதுடில்லி)

இந்தியாவில், கிரிக்கெட் ஆட்டத்தில் பொதுமக்களுக்கு இருக்கும் ஆர்வத்தைப் பயன்படுத்தி, சனத்தொகையை கட்டுப்படுத்தும் முயற்சியில் இந்திய அரசு புது வகையான நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ளவுள்ளது.

அடுத்தவாரம் இந்திய-இங்கிலாந்து அணிகளுக்கிடையே நடைபெறவுள்ள கிரிக்கெட் போட்டியில் ஆட்டமொன்றில் பெறப்படும் ஓட்டங்களின் வேகத்தின் விகிதத்துடன் சனத்தொகை அதிகரிப்பு வீதத்தை ஒப்பிட்டு ஒருமணி நேரத்திற்கு ஒரு முறை அதனைத் தொலைக் காட்சியில் ஒளிபரப்பப்படவுள்ளது. (உ-5)

# விளையாட்டு செய்திகள்

### உலகக் கிண்ண

## கால்பந்தாட்டப் போட்டி நடுவராக சென்னை வாசி

(புதுடில்லி)

உலகக்கிண்ண கால்பந்தாட்ட போட்டிகளின் நடுவர்களில் ஒருவராக சென்னையைச் சேர்ந்த 39 வயதான கே. சங்கர் என்பவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்தவருடத்திற்கான உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் யூன் மாதம் ஆரம்பமாகவுள்ளது.

உலகக்கிண்ண கால்ப்பந்தாட்டப் போட்டிகளில் நடுவாராக செயற்படுவதற்கு இந்தியாவில் இருந்து ஒருவர் தெரிவு செய்யப்பட்டமை இதுவே முதற்தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (உ-5)

## எல்லே போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டியில் எல்லே போட்டி எதிர் வரும் 19, 20ஆம் திகதிகளில் யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

அத்துடன் பெண்களுக்கான எல்லே போட்டி எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-10,19)

## வலைப் பந்தாட்டம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையேயான விளையாட்டுப்போட்டியில், வலைப் பந்தாட்டப் போட்டிகள் கொக்குவில் இந்துக் கல்லூரியில் நேற்று முதல் இடம்பெற்று வருகின்றன.

வலைபந்தாட்டப் போட்டி 15, 16, 17, 18 ஆம் திகதிகளில் பி. ப. 3.30 மணி தொடக்கம் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-10,19)

## நிலக்கரிச் சுரங்க விபத்துக்களில் 26 பேர் பலி

(பீஜிங்)

சீனாவில் கடந்த இருதினங்களில் ஏற்பட்ட நிலக்கரி சுரங்க விபத்துக்களில் 26பேர் பலியாகியுள்ளனர்.

குனாள் மாகாணத்தில் நிலக்கரிச் சுரங்கத்தில் வாயு கசிந்ததில் 18 தொழிலாளர்கள் மூச்சுத் திணறி இறந்துள்ளனர்.

இதே வேளை, திங்கட் கிழமை சியான்ஸி மாகாணத்தின் இன்னொரு சுரங்கத்தில் வெடிப்பு ஏற்பட்டதில் 7 பேர் பலியாகியுள்ளனர் என்று அரச செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கிறது. (து)

# உலக தரிசனம்

## இந்தியப் படையினர் தொகை குறைக்கப்படாது

(புதுடில்லி)

இந்தியாவுக்கு எதிரான பாகிஸ்தானின் ஆதரவு தீவிரவாதிகளின் தாக்குதல்கள் நிறுத்தப்படும் வரை இந்திய-பாகிஸ்தான் எல்லைகளில் நிறுத்தப்பட்டிருக்கும் இந்திய இராணுவத்தினரின் எண்ணிக்கை குறைக்கப்படமாட்டாதென இந்திய பாதுகாப்பமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் தெரிவித்துள்ளார்.

தீவிரவாதிகளுக்கு எதிராக நடவடிக்கைஎடுக்கப்படுமென தெரிவிக்கும் பாகிஸ்தான் அதனை செயல் வடிவத்திலும் காட்டவேண்டுமெனவும் அவர் கூறினார். (உ-5)

## ஆயுதக்கப்பலை தடுத்துநிறுத்துவதற்கு அமெரிக்கா காரணம்

(வாஷிங்டன்)

50 தொன் ஆயுதங்களுடன் பலஸ்தீனத்திற்குச் சென்றுகொண்டிருந்த கப்பலை, இஸ்ரேல் தடுத்துநிறுத்துவதற்கு அமெரிக்க புலனாய்வு அதிகாகளே உதவியதாக வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

டொங்காவில் பதிவுசெய்யப்பட்ட ''கரெனா'' என்ற இந்தக்கப்பல் செங்கடலில் கடந்த 3 ஆம் திகதி இஸ்ரேலிய கடற்படையினரால் கைப்பற்றப்பட்டமை தெரிந்ததே.

இந்த ஆயுதக் கடத்தலுக்கு பலஸ்தீனத் தலைவர் ஜசீர் அரபாத்தே காரணமென்று இஸ்ரேல் பிரதமர் தெரிவித்திருந்ததை பலஸ்தீன தலைவர் மறுத்திருந்தார்.

இதேவேளை, இந்த ஆயுதக் கடத்தலுக்கும் ஜசீர் அரபாத்துக்கும்தொடர்பில்லையென அமெரிக்கவெளியுறவு அமைச்சர் கொலின் பவல் தெரிவித்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-5)

## இந்தியா தொடர்பான சீனாவின் நிலைப்பாட்டை பிரதமர்தெளிவுபடுத்தினார்

(புதுடில்லி)

இந்தியாவிற்கு சீனா அச்சுறுத்தலாகஇல்லைஅதேபோல் சீனாவிற்கு இந்தியாவும் அச்சுறுத்தலாக இல்லை யென்று சீனப்பிரதமர் தெரிவித்தார்.

புதுடில்லிக்கு விஜயம் செய்துள்ள சீனப் பிரதமருக்கு இந்தியப் பிரதமர் புதுடில்லியில் கொடுத்த விருந்துபசாரத்தின் போதே சீனப் பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவ்விருந்தில் மேலும்பேசுகையில்; சீனாவும்இந்தியாவும் மிகவும் நெருங்கியநட்புநாடுகள் என்றுதெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான்-இந்திய முறுகல்நிலைஏற்பட்டுள்ளவேளையில்சீனப்பிரதமரின்இப்பேச்சு முக்கிய அம்சம் பெறுகிறது.

இதேவிருந்தில் பிரதமர் வாஜ்பாய் பேசுகையில்; பயங்கர வாதத்துக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு எல்லா நாடுகளும் முக்கிய இடம் கொடுக்கிறதென்றும் சீனாவும் இந்தியாவும் இணைந்து செயற்பட முன் வந்திருப்பது மகிழ்ச்சியைத் தரும் விடயமாகுமென்றும்தெரிவித்தார்.

(து)

## தலிபான் தலைவர் பாகிஸ்தானில் தஞ்சம்

(வாஷிங்டன்)

தலிபான் தலைவர் முல்லா முகமட் ஓமர் பாகிஸ்தானில் தங்கியுள்ளதாகவும் அவர் பாகிஸ்தானில் வெளிவரும் வாரப்பத்திரிகை ஒன்றுக்கு பேட்டியளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கந்தகார் நகரைச் சுற்றி அமெரிக்க விமானங்கள் நடத்திய கடும் விமானத்தாக்குதல்களின் மத்தியில் தமது ஆதரவாளர் குழுவுடன் றிச்சோ ஒன்றில் தப்பிச் சென்றதாகவும் பின்னர் அவர் ஒருவாறு பாகிஸ்தானுக்குள் நுழைந்துவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-5)

## மாண்ட மனிதர் மீண்டும் உயிர் பெற்றார்

(புதுடில்லி)

இந்தியாவின்காஷ்மீர்ப்பகுதியில் அமைந்துள்ள லக்னோ நகரில் இறந்தவர் ஒருவர் தகனத்திற்காக வானில் ஏற்றிய சமயம் உயிருடன் மீண்டுள்ளார்.

சுக்னால் ஜெயசீல் (வயது 55) என்பவர் சலரோகநோயினால் பீடிக்கப்பட்டநிலையில் கடந்த 29 ஆம் திகதி வைத்தியசாலைய்யில் அனுமதிக்கப்பட்டார்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு 14 நாட்களின் பின்னர் இறந்த இவரதுஉடல் வைத்திய சாலையிலுள்ள பிரேத அறையில் சுமார் 8 மணித்தியாலயங்கள்வைக்கப்பட்டதாகவும்,

பிரேத அறையிலிருந்து அவ

(3 ஆம் பக்கம் பார்க்க)

ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி

குறள்

# வலம்புரி

## பேராசிரியர் கூறிய உண்மை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் குறித்து வரலாற்றுத் துறைப் பேராசிரியர் க.சி.சிற்றம்பலம் அவர்கள் ஓர் உண்மையை பலரும் தம் உள்ளத்திற்குள் வைத்து சொல்லவும் மெல்லவும் முடியாது திணறிக்கொண்டிருந்த மனவேதனையை துணிவோடு வெளிப்படுத்தியுள்ளார்.

கடந்த தேர்தலில் யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் 'கள்ளவாக்குப் போட்டு கறுப்பு முத்திரை குத்தப்பட்டார்கள்' என்பதே பேராசிரியர் சிற்றம்பலம் வெளிப்படுத்திய விடயமாகும்.

பேராசிரியர் கூறியஇவ் விடயத்தை யாழ்ப்பாணத்தில் வெளிவரும் பிராந்தியப் பத்திரிகையொன்று கடந்த 14 ந் திகதிய தனது பதிப்பில் துலாம் பரமாக வெளிப்படுத்தியுள்ளது. இதன் மூலம் பல்கலைக்கழகச் சுவருக்குள் 'பல்கலைக்கழக சமூகத்தின் முக்கிய பகுதியினர் விட்ட தவறை-பிழையை அதே சமூகத்தைச் சார்ந்த ஒருவா சுட்டிக்காட்டிய விடயம் சமூக மட்டத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது

பல்கலைக்கழக மாணவர்கள் சமூகததின் மதியில் மதிப்புக்குரியவாகள். அதனிலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு ஒரு வரலாறறுப் பாரம்பரியம் - மதிபபு உண்டு. அதேவேளை உலகு வாழ் தமிழர்களையெல்லாம் சிந்திக்க வைத்த பொங்கு தமிழ் எழுச்சியை ஆரம்பித்து வைத்த பெருமையும யாழ் பல்கலைக்கழக மாணவர்களையே சாரும்

இந்நிலையில் அதே மாணவர்கள் கடந்ததோதலில் கள்ளவாக்குப் போட்டார்கள் என்ற உண்மையை திரு.சிற்றமபலம் அவர்கள் வரலாறறுத்துறைப் பேராசிரியா என்ற நிலையில் இருந்து கூறியிருந்தாலும் வெளிச சமூகததில் அவர் தமிழா விடுதலைக் கூட்டணியின முககிய தூண் என்பது அறியப்பட்ட விடயம். அவ்வகையில் யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் கள்ள வாக்குப் போடுவதாக இருந்தால் - போட்டது உண்மையானால அது தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமையிலான தமிழ்க் கூட்டமைப்புக்கே போடப் பட்டிருக்கும் என்பது வெளிடபடை.

# தூய வாழ்விற்கு துணை செய்யக் கூடியதாய் அமைந்த அருள் மொழிகள் நமக்கு வழிகாட்டும்

தொகுப்பு:

**வசந்தா மணாளன்**

ஐம்புலனுக்கும் நாம், அடிமையாகாமல் அவைகளுக்கு நாம் ஆட்டுவிப்போராகத் திகழ வேண்டும். மனச் சாட்சிக்குச் செவிசாய்த்தால், நேரான பாதையில் சீராகச் செல்லலாம் பொன் பொருள்களை இழப்பதல்ல தியாகம், ஆசைகளை அழிப்பதே தியாகமாகும். அழியாப் பொருளை உணர்ந்து, அதை அடையும் முயற்சியில் ஏற்படும் தடங்கல்களைத் தாங்குவதே தவமெனலாம். செயற்கைக் கோளைப்படைத்த விஞ்ஞானியைப் பாராட்டுகிறோம். இயற்கைக் கோள்களை உற்பத்தியாக்கிய இறைவனை எண்ணிப் பார்க்க வேண்டாமா? ஜீவசக்தி என்ற 'நெகடிவ்' வையும், இறைத் தன்மை என்ற 'பொஸிடிவ்' வையும், சேர்த்தால் ஆன்மீகம் என்கின்ற மின்சக்தி கிடைக்கும்' ஆன்மீகம் என்பது ஒரு உயர்ந்த செடி, அதைக் கட்டுப்பாடு என்ற வேலியிட்டே காக்க வேண்டும்.

### ஒழுக்கமே உயர்வு

ஒவ்வொரு முறை மூச்சு விடும் போதும், இறைவனை நினைக்கப் பழகினால், இறுதி மூச்சு விடும் போதும் நினைத்துக் கொண்டே விடமுடியும். இறைவன் ஒரு மந்திரவாதி, அவன்படைத்த மரஞ்செடியே இந்த உலகம். இறையுணர்வற்ற மனித சமுதாயம் வரையறையற்றவிலங்குகள் வாழும் வனமாகும். ஒழுக்கம் உயர்வைத் தரும், உலகம் முழுவதும் ஒழுக்கத்தோடு வாழ்ந்தால் எங்கும் அமைதி காணப்படும். இன்றைய உலகம் அமைதியையும்விரும்புகிறது. அணு குண்டையும் விரும்புகிறது. ஆனால் ஒன்று வந்தால் மற்றொன்று ஓடிவிடும், இரும்பு நீருடன் சேர்ந்தால் துருப்பிடிக்கும், நெருப்புடன் சேர்ந்தால் தூய்மையாகும். அவ்வண்ணமே நாமும் சேருமிடத்திற்கேற்ப மாறுவோம். பிறப்பு, இறப்பு என்னும் பிணிநீங்கவே இப் பிறவியை நாம் நல் வழியில் செலுத்த வேண்டும். தியாகம் என்னும் ஆரோக்கியம் இல்லையானால், தன்னலம் என்னும் வியாதி வந்து விடுகிறது.

### இறையுணர்வு

ஆசை யென்னும் தளை அறுந்தால் ஆனந்தம்என்னும் ஊருக்கு இலகுவில் சென்று விடலாம். இயற்கையில் பரிசுத்தமான பஞ்ச பூதங்களும் செயற்கையால் மனிதனைப் போன்று கெட்டுவிடுகின்றன. மனிதன் மெல்ல, மெல்ல தனது இயற்கையான தெய்வீகத்தைமறந்து செயற்கையால் பேய்தன்மையை அடைந்து வருகிறான். இறையுணர்வுஎன்னும் கண்களை இழந்தால், இடுக்கண் என்றகுழியில் விழ வேண்டியது தான். இருண்ட அறையில் விஷக்கிருமிகள் சேர்வதைப்போன்று, தூய்மையற்றமனத்தில் அழுக்காறு அவாவெகுளி ஆகிய நச்சுப் பூச்சிகள் சேருகின்றன. ஐம்பொறிகளை நமக்களித்த இறைவனுக்கு நாம் செலுத்தும் நன்றி, அவற்றை நல்ல வழியில் செல்ல விடுவதேயாகும், அதிகம் படித்தவன் வாதம் புரியப்பயன்படுவான். பரிபூரண ஞானத்தை அடையப்படிப்பு மட்டும் போதாது. துன்பம் வரும் போது சோர்வடைய வேண்டாம். நெருப்பிலிட்டு அடித்துத் தீட்டும் தங்கமே அணிகலன் ஆகிறது.

### இதயமெனும் கமரா

நன்றிமறத்தல், புறங்கூறல், பொய் சொல்லல், பிறரைப் பழித்தல் எனும் குறறங்களற்றவன குணவானாவான். கன்றின் குரல் கேட்டுவரும் கறவைப்பசுவைப்போல் பக்தன் குரல் கேட்டுப்பரமன் வருவான். இதயம் எனும் கமராவினாலேயே இறைவனைப்படம் பிடிக்க வேண்டும். இறைவன் நம்மிடம் குலம், கோத்திரம் பணம், பதவியைப்பார்ப்பதில்லை. வாய்மை. நேர்மை, தூய்மை, என்பவற்றையே தேடுகிறான். பொறாமை, சினம், தற்பெருமை போன்றவை மனிதனை வாட்டும் நோய்கள. இவை மருத்துவத்திற்குக் கட்டுப்படுவதில்லை. பிசைந்தமாவு பதப்படுகிறது. இன்னல்களைச் சந்தித்தவனும் அவ்வாறுபக்குவப் படுகிறான். நிலம், நீர், தீ, வெளி, வளி என்பவற்றை அளவோடு ஆளுகின்றோம், அவ்வாறே ஐம்பொறிகளையும் ஆளவேண்டும்.

### ஆசையே துன்பம்

இன்பம் என்னும் பயிரை வளர்க்கிறோம், துன்பம் என்னும் 'களை' அதில் தோன்றாமலிருப்பதில்லை, வேரோடு அதனைக்களைந்தால்விளைச்சல் பெருகும். மேகம் வானத்தோடு ஒட்டாததுபோல, பரம் பொருளைத்தேடும் அறிஞர்களும் உலகத்தோடு ஒட்டுவதில்லை. பலதுன்பங்களுக்கு ஆசையே காரணம், ஆசையேனும் சடையைநீக்கினால், இன்பமென்னும் பலாச்சுளைகள் கிடைக்கும். மனதில் வலிமையிருந்தால் அழுகையைச் சிரிப்பாக்க முடியும், எள்ளில் எண்ணெய் போலவும், பாலில் வெண்ணெய் போலவும் இறைவன் எல்லாப் பொருள்களிலும் இரண்டறக் கலந்துள்ளான்.

தாய்ப்பாலுண்ண குழந்தைக்கு நேரம் காலம் தேவையில்லை. இறைவனை வணங்கவும் அவ்வாறே. கடவுள் பக்தி என்ற மெய்ப்பாதுகாப்பாளன் நம்மிடமிருந்தால் கவலையற்று எங்கும் செல்லலாம். கடல் ஒன்றே ஆனால் ஒவ்வோர் இடத்தில் ஒவ்வொரு பெயர். இறைவனும் ஒன்று தான் நாமங்கள் தான் வேறு. மலர்ந்த மொட்டுக்கள் தான இறைவனடியைச் சேர்கின்றன. அதேபோன்று விரிந்த மனமுள்ளவரே நிமலனருள் பெறமுடியும். பொருளைவேண்டிப் பூசை செய்வதை விட இறைவன் அருளை வேண்டி அறம் செய்வதே நன்று. உடல் ஒரு கோயில், அதில் இறைவன் வீற்றிருக்கிறான். ஆகவே அதனை நாம் எப்போதும் தூய்மையாக வைத்திருக்க வேண்டும்.

### பேரானந்தம்

ஞானமென்னும் கதவைத் திறந்து அஞ்ஞானமென்னும் திரையைக் கிழித்தால் பேரானந்தத்தின் பிறப்பிடத்தைக் காணலாம். அதுவே கடவுள. ஜீவாத்மாவும் பரமாத்மாவும் இரும்பும் காந்தமும் போன்றவை. துரு இருந்தால் காந்தம் கவராது. ஆகவே நம்மிடம் குற்றம் சேராமல் நடந்து கொள்ள வேண்டும். நீதிபதி சாட்சியங்களைக் கொண்டே தீர்ப்பளிக்கிறார். இறைவன் நாம் செய்த வினைகளைக் கொண்டே நமக்குப் படியளக்கிறான. பொருள் வாங்கப் பணம் வேண்டும். இறையருள் வாங்க இதயம் ஒன்றிய பக்தி வேண்டும். பண்பு என்பது ஒரு சர்வரோக நிவாரணி. புறங்கூறல், பழிவாங்கல், வஞ்சித்தல் என்னும் பல நோய்களைப் போக்கும்.

பக்தி என்னும் ஏணிப்படிகளில் ஏறினால், பரமன் இருக்கும்பரணை அடையலாம். மனிதனுக்குஅவன்செய்த அறமும் பாவமுமே உற்ற நண்பர்கள் உயிர் பிரிந்த பின்பும் பற்றித் தொடர்பவர்கள் அவ்விருவருமே. நீரில் நனைந்த நெருப்புக் குச்சி விளக்கேற்ற உதவாது. அதுபோலப் பாவச் செயல்களைச் செய்தவன் நற்செயல்களுக்கு உதவ மாட்டான். ஆசான் தன்னைக் கண்காணிக்கிறான்என்றுமாணாக்கன்அறிந்தால் குறும்பு செய்வதில்லை. இறைவன் நம்மைக் கண்காணிக்கின்றான் என்று நம்பினால், நாம்தவறுசெய்ய மாட்டோம்.

### ஆசையெனும் சனி

பல பொறிகளால் விண்கோளை அமைத்த நம் விஞ்ஞானிகள், ஐம்பொறிகளை அடக்க ஒரு பொறியும் கண்டு பிடிக்கவில்லையே! கோட்சாரச் சனி நம்மைஏழரைஆண்டுகளே ஆட்டுகிறது. ஆனால் ''ஆசை'' என்னும் சனி நம்மை ஆயுள் முழுவதும் ஆட்டுவிக்கிறது. மந்திரத்தால் விஷம் இறங்குகின்றது. இறைவன் பேரால் நம் பாவங்கள் அகன்று விடுகின்றன. மனஉறுதியுள்ளவன் நடுக்காட்டில் நடு நிசியிலும் வசிக்கலாம். அது இல்லாதவன் நாலடுக்கு மாடியில் வசித்தாலும் நடுங்கிக் கொண்டே இருப்பான். மனம்ஒருகுரங்கு. அது ஓரிடத்தில் நில்லாது, அதை நீங்கள் ஒரு குரங்காட்டியைப் போல அடக்கியாள வேண்டும். நமது உயிர் தங்கியிருக்க, இறைவன்நமக்களித்த வாடகை வீடுதான் இந்த உடல். இதனை என்றாவது ஒருநாள் காலி செய்தே ஆக வேண்டும்.

மயிலின் முட்டையைக் கோழி அடைகாத்தாலும் குஞ்சுமயிலாகத்தானிருக்கும். தெய்வீகத் தன்மை பொருந்தியவர்கள், எவரோடு சேர்ந்தாலும் மாறமாட்டார்கள். துன்ப அலைகள்மென்மேலும் வந்து கொண்டிருந்தால் கரையேறப் போவது உறுதி. இன்பமும் துன்பமும் ஒவ்வொரு செயலிலும் இணைந்தே வருகின்றன. விகிதாசாரங்கள தான் வேறு. இதயமென்னும் பூங்காவிற்குக் கட்டுப்பாடு என்னும் வேலி போட வேண்டும். இன்றேல் அழுக்காறு, அவாவெகுளி என்னும் ஆடு, மாடு, எருமைகள புகுந்து விடும். கடவுளைப் பற்றிப்பல கருத்து வேறுபாடுகள இருந்த போதிலும் எல்லாவற்றுககும் மூலப்பொருள் நிச்சயமாக உண்டு. மனோரஞ்சிதமலர் நாம் நினைக்கும் மணத்தைக் கொடுக்கும். அதேபோல் இறைவன நாம் நினைக்கும் வடிவத்தில் இருக்கிறான்.

### முயற்சி தேவை

உள்ளத்தில் பக்தியில்லாமல் உயர்ரக மலர்களால் அருச்சனை செய்வதை விட, களங்கமில்லாப் பக்தியோடு மனதில் வழிபடுவதே சிறந்தது. மின்சாரமிருக்கிறது. பல்ப்பும் இருக்கிறது. ஸ்விட்சும் இருக்கிறது. ஆனால் அதைத் தட்டினால தான் ஒளி வரும. இறைவன் இருக்கிறான். அவனை அடையப் பக்தியும் இருக்கிறது. முயற்சி தான் தேவை. விஞ்ஞானம்அளவற்ற ஆற்றல் பெறறது. மெய்ஞ்ஞானம் அதைவிட ஆற்றலுள்ளது.

நல்லவற்றையே பார்த்து, நலலவற்றையே செய்தால கடவுளை அடைய முடியும். தன்னலமற்ற தியாகமே பேரானந்தத்தின் இரகசியம், உலகப்பற்று எவ்வளவுக்கெவ்வளவு குறைகிறதோ அவ்வளவுக்கவ்வளவு கடவுள் பக்தி அதிகமாகிறது. கடவுளை நினைத்திருக்கும் மனது தேனை மட்டுமே அருந்தும் தேனீயைப் போன்றது. பொருளில்லாதவன் ஏழையல்ல. ஆசை அதிகம் உள்ளவனே ஏழையாவான். இறைவனுக்குச் செய்யும் சேவையாக நாம் செய்யும் கருமங்கள் ஆகுமாயின் அவை, தெய்வீகமாகவும் புனிதமாகவும்ஆகின்றன. வாழ்க்கைப் பயணம் ''நான்'' என்பதிலிருந்து ''நாம்'' என்ற உணர்வு பெறும்நிலை வரைதான்.

## தினசரி தியானம்

### பொய் சேர்ந்த சிந்தை

பொய் சேர்ந்த சிந்தை புகாதாய் போற்றி
போகாது என் னுள்ளத் திருந்தாய் போற்றி

-அப்பர்

மெய்ப்பொருளே, என் சிந்தையானது பொய்க்குப் புகலிடம் என்றெண்ணி அதைப் புறக்கணித்து விடாதே. உனதுசான்னித்தியமே பொய்யைப் போக்குவதற்கு உற்ற உபாயம்.

சூரியன் அவ்வளவு பெரியது எனினும் ஒரு சிறு மேகம் அதை நமக்குத் தெரியா வண்ணம் மறைத்து விடுகிறது. மனதில் உள்ள அழுக்கு அதனுள்ளே இருக்கும் தெய்வம் தெரியாதபடி திரைபோட்டு விடுகிறது. பொய் பேசும் தன்மையே அத்தகைய அழுக்காக வடிவெடுத்திருக்கின்றது. சத்திய விரதத்தில் நிலைபெறுமளவு உள்ளே ஒளிரும் இறைவனை உணரலாம்.

-ஸ்ரீமத் சுவாமிசித்பவானந்தர்


ஓம்
சிவமயம்

## திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான விஷு வருடம் தைத்திங்கள் 5ம் நாள் (18-01-2002) வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிமுதல் 10.00 மணிக்குள் வரும் பூரட்டாதி நட்சத்திரமும் சித்த யோகமும் மீனலக்கினமும் கூடிய சுபமுகூர்த்தவேளையில்,

எனது ஏக புத்திரன்
திருநிறைச்செல்வன்
**திருமாவளவன்**
(அகிம்சா)
அவர்களுக்கும



எமது கனிஷ்ட புத்திரி
திருநிறைச்செல்வி
**மதிச்செல்வி**
(செல்வி)
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணை கொண்டு திருமாங்கல்யதாரணம் செய்ய பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு, மேற்படி வைபவம் தெகிவளை நெடுமால் ஸ்ரீ மகா விஷ்ணு ஆலய கல்யாண மண்டபத்தில் இனிது நடைபெறவிருக்கும் திருமண வைபவத்திற்கு தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திருமதி பொன்மணி சண்முகராஜன்
நா.திருச்செல்வம், நா.கிருஷ்ணபாலா
இல,18,தயா வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு- 06

திரு.திருமதிசெ.மதுசூதனன்,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்

(இரு வீட்டார் அழைப்பு) (C/3276)



மா விநியோகம் பற்றிய

## அறிவித்தல்

**MERCK, KOMARI** கப்பலில் இருந்து கோதுமை மா இறக்கும் பணிகள் நாளை (17.01.2002) வியாழக்கிழமை ஆரம்பிப்பதால் வாடிக்கை யாளர்கள் தயவு செய்து உடன் தொடர்பு கொள்ளவும்.

**வி.எஸ்.பி.குறூப்**

**275, 277, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

(C/3278)



## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் சங்கீத ஆசிரியை
திருமதி மகாலக்சுமி ஜெகநாதன்
அவர்களின் அன்புத் தந்தையார்
**கா.சி.செ.முத்துக்குமாரு**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை இதய பூர்வமாக தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம

யா/மல்லாகம் மகாவித்தியாலயம்
மல்லாகம்.
(4232)



**A/L 2004**

**கலை**
**வர்த்தகப்பிரிவு**
19/01/02 - 8 AM

**BECON**
**யாழ்**
4193


## நோர்வேயின்.....


நிலைப்பாடு குறித்து அன்ரன் பாலசிங்கம் நோர்வே தூதுக்குழு விடம் தெளிவுபடுத்தியிருப்பதாகவும் தீர்க்கமான இறுதி முடிவு எதுவும் எட்டப்படாத நிலையில் பேச்சுவார்த்தை தொடர்ந்து நடை பெற்றுகொண்டிருப்பதாக பிந்தி கிடைத்த செய்திகள் தெரிவிக்கின் றன. இது இவ்வாறிருக்க நிரந்தர யுத்தநிறுத்த அறிவிப்புபொன்றுக்கு விடுதலைப்புலிகளும் அரசும் இணக்கம் தெரிவிக்கலாம் என்றும் உறுதிப்படுத்தப்படாத செய்திகள் வெளியாகி உள்ளது. (வ)

## பத்திரிகை.....

வேளை இவர்கள் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை சந்திப்பதற்கு முயற்சி எடுப்பார்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (வ)


## கொழும்பில் தங்குமிட வசதி

**கீழ்க் காணும்விலாசத்தில் அமைந்துள்ள தங்குவிடுதியில் சகல வசதிகளுடன் அறைகள் வாடகைக்கு உண்டு.**



- மாதாந்த வாடகை
- நாள் வாடகை
- சமையல் வசதி
- தொலைக்காட்சி வசதிகள்
- 24 மணிநேர தண்ணீர் வசதி
- வெளிநாட்டு, தொலைபேசி, பக்ஸ் வசதி
- உலநாடுகளுக்கான விமான டிக்கட் வசதியும் செய்து கொடுக்கப்படும்.
- விமான நிலையப்போக்குவரத்து வசதிகள்


வினோத் இன்
33, ஸ்ரீகுணாநந்த மாவத்தை,
கொட்டாஞ்சேனை,
கொழும்பு – 13

**Vinoth Inn Lodging House**
**33, Sri Gunanada Mawatha, Kotahena, colombo-13**

**TEL : 431845, 541635**
(4222)


# 5-ம் ஆண்டு நினைவஞ்சலி

# 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்ந்தது

31 . 08 . 1964

உதிர்ந்தது

16 . 01 . 1997

திதி - 22.01.2002

## சீவரத்தினம் - உதயகுமார்

## (கலட்டிக்கண்ணன்)

ஆண்டைந்து ஆனதைய்யா!
ஆறுதில்லை எம்மனம்
போதும்என்று போனாயோ?
மாறும்இந்த உலகத்தில்
மீண்டும் இங்கு வருவாயோ?
பார்த்திருக்கிறோம் - உனக்காய்
.......காத்திருக்கிறோம்.........

ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்
அண்ணன்
சுகுமாரனும் (சுகு) குடும்பத்தினரும்.

77/58இராமநாதன் வீதி,
கலட்டி, யாழ்ப்பாணம்.

(4238)

இப் பத்திரிகை "வலம்புரி" அன் கோ ஸ்தாபனத்தினரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம். எனும் விலாசத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 16.01.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.